*** இயேசுவோடு நம்மை இணைத்துக் கடவுள் கட்டும் கோவில்-2026

எபேசியர் 2:18 அப்படியாக, இஸ்ரவேல் சமுதாயத்தார்களும், மற்ற சமுதாயத்தார்களும் சுத்தமான ஆவியானவராலும், யேசு மேசியா நமக்காக செய்த செயல்களினாலும், நம் அப்பாவாகிய கடவுளிடம் சேரும் சிலாக்கியம் பெற்றோம்.

19 ஆகவே, இனிமேல் மற்ற சமுதாய மக்களாகிய உங்களை கடவுளுடைய நாட்டின் குடிமக்களாக வாழ தகுதியில்லாதவர் என்றோ அல்லது கடவுள் தம்முடைய மக்களுக்காக வைத்துள்ளவைகளை பெற்றுக்கொள்ளத் தகுதியில்லாத அந்நியர்கள் என்றோ, எவரும் சொல்லமுடியாது. மாறாக, கடவுளின் சுத்தமான மக்கள் வாழ்கிற நகரத்தில் சேர்ந்த உங்களை, அவரின் சொந்த பிள்ளைகள் என்றுதான் சொல்வார்கள்.

20 அதுமாத்திரமல்ல, ஒரு கட்டிடத்தை முழுமையாகத் தாங்கி நிற்கும் முக்கியமான கல்லைப் போல யேசு மேசியாவும், அஸ்திபாரம் போன்று, கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்றவர்களும், யேசுவின் தூதுவர்களும் இருக்கிறார்கள். அந்த அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்ட கடவுள் தங்கும் கோவில் போல, அவர்கள் சொல்லிக் கொடுத்தவைகளை நம்பிவாழ்கிற அனைவரும் இருக்கிறோம்.

21-22 மேலும், நீங்கள் இஸ்ரவேல் சமுதாயத்தைச்
சேராதவர்களாக இருந்தபோதிலும், யேசு
மேசியாவோடு நீங்கள் இணைந்து, வளரும்போது,
ஒரு வீட்டைக் கட்ட மற்ற கற்கள் எப்படி அவசியமோ,
அதுபோலவே, உங்களையும், எங்களோடு சேர்த்து,
சுத்தமான ஆவியானவர் வசிக்கும் அவருடைய
சுத்தமான கோவிலாகக கடவுள் நம்மைக் கட்டி
எழுப்புகிறார்.

உள்ளடக்கம்

1. யேசு மேசியா நமக்காக செய்த செயல்களை நம்பி வாழும் வாழ்க்கை

a) யேசு மனிதனாகப் பிறக்க வேண்டிய அவசியம் - மனித எதிரியின் தலையை நசுக்க 4
b) பாவமில்லாத வாழ்வு 11
c) கடவுளின் குணங்களை வெளிக்காட்டி, அவரைப் போல வாழவைக்கும் யேசு! 18
d) மரணம், உயிர்த்தெழுதல் மூலம் யேசு செய்த பாவ பரிகாரம் 25

2. ஆவியானவர் நமக்காகச் செய்த செயல்களை நம்பி வாழும் வாழ்க்கை

a) யேசுவின் பிறப்பில் ஆவியானவர் 1
b) யேசுவின் ஊழியத்தில் ஆவியானவர் 8
c) யேசுவின் மரணத்தில் ஆவியானவர் 15
d) யேசுவின் உயிர்த்தெழுதலில் ஆவியானவர் 22

3. அப்பாவாகிய கடவுளிடம் சேரும் சிலாக்கியம் பெற்றவர்கள்

a) நல்ல செய்தியை நம்பி வாழ்வதால் கடவுளோடு பழகச் சரியானவர்கள்: என்ற தகுதி பெற்றவர்கள்-1
b) அப்பா – பிள்ளை உறவு:-8
c) விசுவாசத்தால் பிழைப்பு:-15
d) ஆவியானவரின் தங்குதலால் கிடைக்கும் கடவுள் குணம்-22
e) ஆவியானவரின் வரங்களால் எதிரியின் செயல்களை அழித்து, யேசுவைப்போல வளரும் யேசு கூட்டத்தார்கள் -29

4. கடவுளின் சுத்தமான மக்கள்
   a) நம்பிக்கை இன்மையால் சுத்தம் இல்லாதவர்கள்-5
   b) மன்னிப்புப் பெற்றதால் சுத்தமானவர்கள்-12
   c) சுத்தமாகுதல் - (மற்றவர்கள் கால்களைக் கழுவுதல்-19
   d) யேசுவைப்போல் முழு வளர்ச்சி நோக்கிய ஆவிக்குரிய பயணம்-26
5. கடவுளுடைய நாட்டின் குடிமக்கள்
   a) இந்த உலக குடிமக்கள்-3
   b) இருள் உலக குடிமக்கள் (பேய்களின் ஆளுகையில் மனம்)-10
   c) இரண்டு உலகங்களுக்கு இடையிலான வாழ்வு (குழப்ப மனநிலை)-17
   d) வெளிச்சத்தின் உலக குடிமக்கள் (கடவுளின் ஆளுகையில் மனம்)–24
   e) கடவுளுடைய நாட்டின் குடிமக்கள் (கடவுள் தந்த அதிகாரத்தோடான வாழ்வு)-31
6. கடவுள் நகரத்திற்குரியவர்கள்
   a) ஆபிரகாம் எதிர்பார்த்து வாழ்ந்த நகரம்-7
   b) இஸ்ரவேல் மக்கள் எதிர்பார்த்து வாழ்ந்த நகரம்-14
   c) பூலோக எருசலேம்-21
   d) மேலோக எருசலேம்-28
7. கடவுளின் சொந்தப் பிள்ளைகள்
   a) கடவுள் சாயலில் மனிதன்-5
   b) கடவுள் சாயலை இழந்த மனிதன்-12
   c) கடவுள் சாயலைத் திரும்பப் பெறும் மனிதன்-19
   d) கடவுள் பிள்ளை என்ற இழந்த உரிமையைத் திரும்பப் பெறும் மனிதன்-26

8. கடவுளிடம் உள்ளவைகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்கள்

a) படைப்பில் கடவுள் உலகோடு இருந்த தொடர்பு - 2
b) கடவுள் உலகோடு இழந்த தொடர்பு -9
c) கடவுள் உலகில் மனிதர்களுக்குள்ள புண்ணியம்/ஆசீர்வாதம்-16
d) கடவுள் உலகில் உள்ளவைகளை பெற்றுக் கொள்ளும் தகுதி-23
e) கடவுள் உலகில் உள்ளவைகளை பெற்று, மற்றவர்களுக்கு கொடுக்கும் தகுதி-30

9. கட்டிடத்தை முழுமையாகத் தாங்கி நிற்கும் முக்கியமான கல்-யேசு மேசியா

a) மனித இனத்தைக் கட்டி எழுப்பும் முக்கிய கல் முதல் ஆதாம்-6
b) புதிய மனித இனத்தின் முக்கிய கல் கடைசி ஆதாம், யேசு:-13
c) முதல் ஆதாமுக்குள்ளான வாழ்க்கை-20
d) கடைசி ஆதாம், யேசுவுக்குள்ளான வாழ்க்கை-27

10. கடவுள் கோவிலுக்கு அஸ்திபாரம் போன்ற யேசுவும், யேசுவின் பிரதினிதிகளும்

a) கடவுளுக்குரியவர்களைக் அவரிடம் சேர்க்க கடவுளால் அனுப்பப்பட்டவர்கள்-4
b) கடவுளால் அனுப்பப்பட்ட யேசு-11
c) யேசுவால் அனுப்பப்பட்ட 12 தூதுவர்கள்/பிரதினிதிகள்-18
d) யேசுவால் அனுப்பப்பட்ட மற்ற தூதுவர்கள்/பிரதினிதிகள்-25

11. கடவுள் கோவிலுக்கு அஸ்திபாரம் போன்ற கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்றவர்கள்

a) கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்றவர்கள்-1
b) சிறிது சிறிதாக தன்னை வெளிப்படுத்திய கடவுள்-8
c) மகன் மூலமாக தன்னை முழுமையாக வெளிப்படுத்திய கடவுள்-15
d) அவரை நம்பி வாழும் அனைவருக்கும் கிடைக்கும் வரம்-22
e) கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்ற ஊழியம்-29

12. யேசுவைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தவைகளை நம்பி வாழ்கிறவர்கள்-அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்ட கடவுள் தங்கும் கோவில்

a) கடவுளால் அனுப்பப்பட்ட யேசுவை நம்பி வாழும் வாழ்க்கை-6
b) கடவுள் வார்த்தைகளை நம்பி வாழும் வாழ்க்கை-13
c) ஆவியானவரோடு இணைந்து வாழும் வாழ்க்கை-20
d) யேசுவைப் போல முதிர்ச்சி அடையும் வாழ்க்கை-27

ஜனவரி

யேசு மேசியா நமக்காக செய்த செயல்களை நம்பி வாழும் வாழ்க்கை

4 யேசு மனிதனாகப் பிறக்க வேண்டிய அவசியம் - மனித எதிரியின் தலையை நசுக்க

இன்றிலிருந்து, உனக்கும், இந்தப் பெண்ணிற்கும் இடையில் சண்டைதான்! உன் சந்ததிகளுக்கும், அவள் சந்ததியில் பிறப்பவருக்கும் சண்டை நடக்கும்! அந்தச் சண்டையில், அவள் சந்ததியில் பிறப்பவர், உன் தலையை நசுக்குவார்! நீ அவர் காலைக் காயப்படுத்துவாய்″ என்றார். (ஆதி. 3:15)

விளக்கம்:

- மனித குலத்தின் முதல் எதிரி, முதல் மனுசியிடம் பொய்சொல்லி ஏமாற்றி, கடவுள் சொல்லுக்குக் கீழ்படியாமல் போகச்செய்த, பேய்களின் தலைவனான சாத்தான்.

- அவனுடைய பொய்யை நம்பி, ஏமாந்து இழந்துபோன கடவுள் சாயல், இவ்வுலகின் மீதான ஆளுகை மற்றும் காலங்காலமாகும் வாழ்க்கையை மீட்டு, அவர்களிடம் திருப்பிக் கொடுக்கவே யேசு ஒரு மனிதனாகப் பிறந்தார்.

- ஆகவே, யேசு மூலம், கடவுள் செய்த செயல்களை நம்பி வாழ்கிறவர்களுக்கு, கடவுள் சாயல், இந்த உலகம், பேய்கள் மீதான ஆளுகை, காலங்காலமாகும் வாழ்க்கை கிடைக்கிறது.

11 பாவமில்லாத வாழ்வு

ஆகவே, கடவுளால் பிறந்த எவரும், அவர் கட்டளைகளை மீறித் தெய்வகுற்றம் செய்யமாட்டார்கள். கடவுளால் பிறந்தவர் வாழ்வில், அவருடைய மகன் யேசு வசிப்பதால், கடவுள் கட்டளைகளை மீறித் தெய்வகுற்றங்கள் எதும் செய்ய முடியாது. (1யோ.3:9)

விளக்கம்:

- கடவுளுடைய கட்டளையை மீறி முதல் மனிதன், முதல் மனுசி செய்த தெய்வகுற்றத்தால், கடவுளோடு பழக முடியாமல், மனிதர்கள் அனைவரும் தெய்வகுற்றத்துக்குள்ளான பாவிகளாகிப் போனார்கள்.

- ஆகவே, ஆகவே மனிதர்களை மீண்டும் கடவுளோடு பழக வைக்கத் தேவையான பரிகாரத்தைச் செய்து, சுத்தமாக வாழவைக்கவே மரியாள் வயிற்றில் யேசு பாவமில்லாதவராகப் பிறந்தார், பாவமில்லாதவராக வாழ்ந்தார்.

- யேசு எப்படி சுத்தமான ஆவியானவர் மூலம் மரியாள் வயிற்றில் பிறந்தாரோ, அதேபோல, சுத்தமான ஆவியானவரால் அந்த யேசுவுக்கள் மறுபடி பிறந்து, ஆவியானவர் வழிநடத்துதலின்படி வாழ்கிறவர்களால், தெய்வ குற்றமோ, பாவமோ செய்ய முடியாத வாழ்க்கை வாழ முடியும்.

18 கடவுளின் குணங்களை வெளிக்காட்டி, அவரைப் போல வாழவைக்கும் யேசு!
ஆகவே, மேல் உலகில் வசிக்கும் உங்கள் அப்பாவாகிய கடவுள் எப்படிக் குறைவே இலலாமல் இருக்கிறாரோ, அதுபோலவே நீங்களும் குறைவு இல்லாதவர்களாக வாழுங்கள்! (மத். 5:48)

விளக்கம்:

- நம்முடைய மனதில் நல்ல எண்ணங்களும், கெட்ட எண்ணங்களும் மாறி மாறி வருவதுபோல, கடவுளுடைய மனதில் வருவதில்லை. அவருடைய மனதில் நல்ல எண்ணங்கள் மட்டுமே ஏற்படுகிறது என்பதை யேசுவின் மனித வாழ்க்கை மூலம் புரிந்துகொள்கிறோம்.
- நம்முடைய மனதில் நல்ல எண்ணங்கள் ஏற்படுவது, நாம் கடவுள் சாயலில் படைக்கப்பட்டதையும், கெட்ட எண்ணங்கள் ஏற்படுவது, அவருடைய சாயலை நாம் இழந்து கெட்டுப்போனதையும் காட்டுகிறது.
- ஆகவே, யேசுவைப் புரிந்துகொள்வதுமூலம், கடவுளுடைய நல்ல குணங்களைப் புரிந்து, நாம் இழந்துபோன அவருடைய நல்ல குணநலன்களைப் பெற்று, யேசுவைப் போல நல்லது மட்டும் செய்து வாழமுடியும்.

25 மரணம், உயிர்த்தெழுதல் மூலம் யேசு செய்த பாவ பரிகாரம்:

ஏசா. 53:10 அடித்துத் துன்புறுத்துவதர்கு கடவுள்
அவரை விட்டுக்கொடுத்தார். மனிதர்கள் செய்த
குற்றங்குறைகளுக்குப் பரிகாரமாக அவர் தன்னுடைய
உயிரைக் கொடுக்கும்பொழுது, மரணம் மூலம்
அவருக்குக் கிடைக்கப்போகும் அவருடைய
பிள்ளைகளோடு சேர்ந்து காலங்காலமாக
வாழ்ந்திருப்பார். இவ்வாறாக, கடவுள்
தான் விரும்பியதை அவர் மூலம் செய்து முடிப்பார்.
11 அவர் அனுபவித்த துன்புறுத்துதலுக்கு ஏற்ற
பலனை இவ்வாறு அவர் அனுபவிக்கும்பொழுது,
அவருடைய மனது திருப்தியடையும். மனிதர்கள்
செய்த குற்றங்குறைகளை தன்மீது ஏற்றுக்கொண்டு,
கடவுள் கொடுத்த கடமையைச் செவ்வனே செய்து
முடிக்கும் அவரைப் பற்றி அறிந்துகொள்கிறவர்கள்,
அவர் எப்படி கடவுள் பார்வையில் சரியானவராக
வாழ்ந்தாரோ, அவரைப் போலவே கடவுள்
பார்வையில் சரியானவர்கள் ஆகிறார்கள்.
12 மனிதர்கள் செய்த குற்றங்குறைகளை
தன்மீது ஏற்றுக்கொண்டபடியால், அவர் ஒரு
குற்றவாளி போல காணப்பட்டு, குற்றவாளிக்குரிய
மரணதண்டனையை ஏற்றுக்கொண்டு, குற்றம் செய்த
மனிதர்களை மன்னிக்க அவர் கடவுளிடம்
வேண்டுதல் செயதபடியால், அனேக மனிதர்களை,
பலவான்கள் போன்ற அனேகரை அவருக்குச்
சொந்தமாகக் கொடுப்பேன் என்று கடவுள்
சொல்லியிருக்கிறார்.

விளக்கம்:

- இவ்வாறாக யேசு செய்த பாவபரிகாரத்தை நம்பி வாழ்கிறவர்களைக் கடவுள், தன்னோடு பழகத்தகுதி வாய்ந்த சரியானவர்கள் என்று ஏற்றுக்கொள்கிறார்.
- ஆகவே, அவர்களுக்கு கடவுளோடு பழகும் புதிய வாழ்க்கை கிடைக்கிறது.
- அந்தப் புதிய வாழ்க்கையில் யேசுவோடு இணைந்து காலங்காலமாக வாழ முடியும்.

பிப்ரவரி
ஆவியானவர் நமக்காகச் செய்த செயல்களை நம்பி வாழும் வாழ்க்கை

1 யேசுவின் பிறப்பில் ஆவியானவர்

அதற்கு கடவுளுடைய தூதர் அவளிடம், ″ ராஜாவாகிய கடவுளுடைய சக்தியோடு, சுத்தமான ஆவியானவர் உன்மேல் நிழலாய் வருவார், அப்பொழுது, எல்லாவற்றையும் விட உயர்ந்த, கடவுளுடைய சக்தியால், உன் வயிற்றில் குழந்தை உருவாகச் செய்வார். ஆகவே, உன் கர்ப்பத்தில் பிறக்கும் குழந்தை சுத்தமானதாக இருக்கும். அவரைக் ’கடவுளின் மகன்’ என்று மக்கள் கூப்பிடுவார்கள். (லூ. 1:35)

விளக்கம்:

- இவ்வாறாக, மரியாள் வயிற்றில் யேசு பிறக்க ஆவியானவர் எப்படி செயல்பட்டாரோ, அதுபோலவே, யேசுவுக்குள் நாம் மறுபடி பிறக்க அல்லது யேசு நமக்குள் உருவாக ஆவியானவர் நம் உள்ளத்தில் நிழல் போல அசைவாடுகிறார்.
- ஆகவே, அதுவரை யேசுவை நம்பாமல், கடவுள் பார்வையில் சுத்தமில்லாமல் வாழ்ந்த நம் வாழ்க்கை, யேசுவை நம்பியவுடன் கடவுள் பார்வையில் சுத்தமான வாழ்க்கையாக மாறுகிறது.
- கடவுளுடைய ஆவியானவர் நமக்குள் வந்து வசிக்கிறார்.
- அவர் நம்மைக் கடவுளுக்குப் பிடித்த வழியில் வழிநடத்துகிறார்.

8 யேசுவின் ஊழியத்தில் ஆவியானவர்

கடவுள் என்னை அவர் வேலையைச் செய்வதற்கு என்று தெரிந்தெடுத்திருக்கிறபடியால், அவருடைய ஆவியானவர் எனக்குள் வசிக்கிறார். உள்ளம் உடைந்து வாழ்கிறவர்கள் வாழ்க்கையைச் சீர்படுத்தவும், பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்களில் சிக்கியிருக்கிறவர்களை விடுவிக்கவும், மற்றவர்களால் கட்டிவைக்கப்பட்டுள்ளது போன்றவர்கள் கட்டுக்களை அவிழ்த்துவிடவும், பல்வேறு பாரங்களைச் சுமந்து கஸ்டப்பட்டு வாழ்கிறவர்களுக்கு நல்ல செய்தியைச் சொல்லவே அவர் என்னை அனுப்பியிருக்கிறார். (ஏசாயா 61:1)

விளக்கம்:

- இவ்வாறாக, யேசுவைப் பற்றிச் சொல்லப்பட்டபடியே, ஆவியானவர் அவரோடு இருந்து, மனிதர்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார்.
- அதுபோலவே, யேசுவுக்குள் மறுபடி பிறந்த நம்மோடும் ஆவியானவர் துணையாக இருந்து அனேகருக்கு நம் மூலம் நன்மைகளைச் செய்கிறார்.

15 யேசுவின் மரணத்தில் ஆவியானவர்:

யேசு அவர்களிடம், “இந்த பூமிக்கு மனிதனாக வந்த என்னைக் கடவுள், மிகவும் பெருமைப்படுத்தப்போகிற நேரம் நெருக்கிவிட்டது.
எப்படியென்றால், கோதுமையை மண்ணில் விதைத்தால், அந்த விதை மண்ணோடு மண்ணாக மட்கினால்தானே, அதிலிருந்து பயிர் முளைத்து வந்து, பலன் கொடுக்கும், இல்லையெனில் அது ஒரு விதையாகவே இருக்கும்.

ஆகவே, ″இந்த பூமியில் நான் வாழவேண்டுமே!″ என்று தன் உயிரை அதிகமாக நேசிக்கிறவன், உண்மையிலேயே அதை ஒருநாள் விட்டுவிட வேண்டியது வரும். ஆனால், என்னோடு சேர்ந்து, இந்த உலக/மண் வாழ்க்கைக்கு சாக நேர்ந்தாலும் பரவாயில்லை என்று தீர்மானிக்கிறவன், உண்மையான என் உயிரைப் பெற்றுக் காலங்காலமாக நிச்சயம் வாழ்வான்(யோவான் 17:23-25).

விளக்கம்:

- இவ்வாறாக, ஒரு விதை மண்ணில் விழுந்து, மண்ணோடு மட்கி, முளைத்து, அனேக தானியங்களை விளையச் செய்வது போலவே, யேசுவின் மரணம் மூலம், அதை நம்பி வாழும் அனேக மக்களுக்குப் புதிய வாழ்க்கை கிடைக்கச் செய்தார்.

புதைக்கும்பொழுது அவர்களுடைய உடலுக்கு ஒரு பெலனோ, ஒரு மதிப்பு, மரியாதையோ இருக்காது. ஆனால், அவர்கள் உயிரோடு எழும்பும் போது, நல்ல பெலனும், சிறப்பும் உள்ள புதிய உடலோடு எழும்புவார்கள்.
ஏனெனில், தங்களுடைய அப்பா அம்மா மூலம் கிடைத்த அவர்கள் உடலை அடக்கம் செய்கிறோம். ஆனால், சுத்தமான ஆவியானவரால் உருமாற்றம்பெற்ற, புதிய உடலோடு அவர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள். ஆகவே, அப்பா அம்மாவால் கிடைக்கும் உடலுக்கும், சுத்தமான ஆவியானவரால் கிடைக்கும் புதிய உடலுக்கும் மிகப்பெரிய வித்தியாசங்கள் உண்டு. (1கொரிந்தியர் 15:43-44)

விளக்கம்:

- யேசு மரித்து அடக்கம் செய்யப்பட்டபொழுது, சாதாரண பூமிக்குரிய மனிதனாக அடக்கம் செய்யப்பட்டார்.
- ஆனால் அவர் உயிரோடு எழுந்தபொழுது, அவருடைய உடல் வானத்துக்குரிய சிறப்பான உடலோடு உயிரோடு எழுந்தார்.
- ஆகவே, அவரை நம்பி வாழும் அனைவரும், வானத்துக்குரிய சிறப்பானஒரு உடலோடு உயிரோடு எழுவார்கள் என்பதையே மேலே உள்ள வசனம் சுட்டிக்காட்டுகிறது.

- மரித்த யேசுவை உயிரோடு எழுப்பிய அதே ஆவியானவர்தான், நம்மையும் அவ்வாறு உயிரோடு எழுப்புவார்.

மார்ச்
அப்பாவாகிய கடவுளிடம் சேரும் சிலாக்கியம் பெற்றவர்கள்

1 நல்ல செய்தியை நம்பி வாழ்வதால் கடவுளோடு பழகச் சரியானவர்கள்: என்ற தகுதி பெற்றவர்கள்:

இருந்தபோதிலும், உங்களில் சிலர் அப்படித்தான் வாழ்ந்து வந்தீர்கள். ஆனால், இப்பொழுதோ, உங்களுடைய அந்த பழைய பாவ வாழ்க்கைக்குரிய தண்டனையை நம் வாழ்வை ஆளும் யேசு மேசியா ஏற்றுக்கொண்டபடியால், அப்படிப்பட்ட கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து சுத்தம் செய்யப்பட்டு, சரியானவர்கள் என்று கடவுளிடம் பெயர் பெற்றீர்கள். மேலும், சுத்தமான ஆவியானவர் உதவியால், கடவுளோடு இணைந்து வாழும் சிலாக்கியம் பெற்று இருக்கிறீர்கள். (1கொரி.6:11)

விளக்கம்:

- மேலுள்ள வசனத்தின் அடிப்படையில், நம்முடைய பாவவாழ்க்கை கடவுளோடு தொடர்புகொள்ளவும், பழகி வாழவும் தடையாக இருந்து வந்தது.
- அதற்காக நாம் பெற வேண்டிய தண்டனையை யேசு பெற்றுக்கொண்டதை நாம் நம்பி வாழ்வதால் அந்தத் தடை நீங்கி, கடவுளோடு தொடர்புகொள்ளும் சிலாக்கியம் கிடைக்கிறது.
- யேசு நம்முடைய பாவ வாழ்க்கையைச் கழுவிச் சுத்தம் செய்ததை நாம் நம்பி வாழும்பொழுது, கடவுளுடைய ஆவியானவர் நமக்கும் கடவுளுக்கும்

இடையோ ஒரு உறவை அதாவது அப்பா பிள்ளை என்ற உறவை ஏற்படுத்துகிறார்.

8 அப்பா – பிள்ளை உறவு:

அதுமாத்திரமல்ல, அவர் தம்முடைய மகனுடைய ஆவியானவரை, நம்முடைய உள்ளத்தில் குடியிருக்கும்படியாக அனுப்பினார். அதன் மூலமாகவே, உரிமையோடு நாம் கடவுளை 'அப்பா' என்று கூப்பிட்டுப் பழகும் உறவு நமக்குக் கிடைத்தது. (கலா.4:6)

விளக்கம்:

- கடவுளுக்கும், ஆதாமுக்கும் இடையே இருந்த அப்பா பிள்ளை உறவு ஆதாமுடைய கீழ்படியாமை என்னும் பாவத்தால், முறிந்துபோய் காணப்பட்டது.
- அந்த உறவை புதுப்பித்து, கடவுளை 'அப்பா' என்று கூப்பிட வைக்கவே, யேசு கடவுளுடைய மகனாக, இன்னொரு ஆதாமாகப் பிறந்து சிலுவையில் மரிக்கும்வரைக் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தார்.
- ஆகவே, யேசுவோடு சேர்ந்து, கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிற அனைவரும் மீண்டும் கடவுளோடு அந்த உறவுக்குள் வருகிறார்கள்.

15 விசுவாசத்தால் பிழைப்பு:-15

ஏனெனில், தனக்காக கடவுள் செய்ததை நம்புகிற ஒருவரே, அவர் பார்வையில் சரியான நபராகி, காலங்காலமாக அவரோடு வாழ்கிறார்″ என்று அவருடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறது. (கலாத்தியர் 3:11ஆ)

விளக்கம்:

- மக்கள் பாவத்தால் அழிந்துபோகாமல் தடுக்கவும், அவ்வாறான அழிவிலிருந்து கடவுள் காப்பாற்றும் வழியைப் புரிந்துகொள்ளவும் சட்டதிட்டங்களைக் கொடுத்தார்.
- ஆனால், அழிவிலிருந்து கடவுள் மனிதர்களைக் காப்பாற்றும் திட்டத்தைப் புரியாத மனிதர்கள், அவர் கொடுத்த சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்து நடந்தால், கடவுள் நம்மை ஏற்றுக்கொள்வார், நாம் பிழைத்துக்கொள்ளலாம் என்று தவறாக நம்பினார்கள்.
- ஏனெனில், அவ்வாறான சட்டதிட்டங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து வாழ்வது அவர்களுக்கு இயலாமல் போனது.
- மேலும், அழிவிலிருந்து கடவுள் காப்பாற்றும் திட்டத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் வீண்பெருமையில் வாழவைத்தது.
- ஆனால், அழிவிலிருந்து கடவுள் காப்பாற்றும் திட்டத்தைப் புரிந்து, யேசு மூலம், தனக்காக கடவுள் செய்ததை நம்புகிற ஒருவரே, அவர் பார்வையில் சரியான நபராகி, காலங்காலமாக அவரோடு வாழ்கிறார்கள்.

22 ஆவியானவரின் தங்குதலால் கிடைக்கும் கடவுள் குணம்:

ஆனால், (நமக்குள் வசிக்கும்) சுத்தமான ஆவியானவர் தரும் ஆசைகள், விருப்பங்கள் என்னவென்றால்: கடவுளைப்போல மற்றவர்கள் மீது காட்டும் அன்புகடவுளைப்போல மகிழ்ச்சி, கடவுளைப்போல மனஅமைதி, கடவுளைப்போல கஷ்ட நஷ்டங்களைச் சகித்தல், கடவுளைப்போல பொறுமை, கடவுளைப்போல தயவுகாட்டுதல், கடவுளைப்போல நல்ல குணங்கள், கடவுளைப்போல நம்பிக்கை அல்லது நம்பிகைக்குரியவராக வாழுதல்,

கடவுளைப்போல சாந்தகுணம், கெட்ட ஆசை விருப்பங்களை அடக்குதல், இதுபோன்ற கடவுளுடைய நல்ல குணங்களை பெற்று வாழவைக்க எந்த சட்டங்களாலும் முடியாது!

அப்படியாக, தங்கள் வாழ்வை யேசு மேசியாவோடு இணைத்துக்கொண்டு வாழ்கிறவர்களோ, தங்களுடைய சுயநலமான ஆசை விருப்பங்கள் அனைத்தையும், மனித சுபாவத்தையும் யேசு சிலுவை மரத்தில் மரித்ததோடு அழித்து வாழ்கிறார்கள். (கலாத்தியர் 5:22-24)

விளக்கம்:

- இவ்வாறாக, நம்முடைய பாவ வாழ்க்கை கழுவப்பட்டு, நமக்குள் ஆவியானவர் வந்து வசிப்பதால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள

கடவுளுடைய குணங்கள் அனைத்தும் நமக்குள் சிறுகச்சிறுக செடிபோல வளர்கிறது.

- அவ்வாறாக வளர்ந்த குணங்களால் மற்ற மக்கள் பயன்பெறும்பொழுது, அது கனியாகச் சுவைதருகிறது.

29 ஆவியானவரின் வரங்களால் எதிரியின் செயல்களை அழித்து, யேசுவைப்போல வளரும் யேசு கூட்டத்தார்கள்.

எப்படியெனில்: நம்மில் சிலருக்கு கடவுளைப் பற்றிய அறிவை வெளிப்படுத்துகிறார்; அந்தக் கடவுள் அறிவைப் பற்றி வேறு சிலரை விளக்கிப் பேச வைக்கிறார்.

வேறு சிலருக்கு கடவுள் மீதான உறுதியான நம்பிக்கையை கொடுக்கிறார்; வேறு சிலருக்கு, வியாதிகளைக் குணப்படுத்த உதவுகிறார்.

வேறு சிலர், மக்கள் அதிசயப்படத்
தக்க செயல்களைச் செய்ய உதவுகிறார்; வேறு சிலர், கடவுள் சொன்னதைச் சொல்லும்
வரத்தை பயன்படுத்த உதவி செய்கிறார்; வேறுசிலர், மற்றவர்கள் கடவுளுடைய ஆவியில் பேசுகிறார்களா? மற்ற ஆவிகளின் உதவியால் பேசுகிறார்களா? என்று கண்டுபிடிக்க உதவுகிறார். வேறுசிலர்,
தங்களுக்குத் தெரியாத மொழியில் பேச உதவுகிறார். வேறு சிலருக்கோ, அவர்கள் பேசுவதின் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள உதவிசெய்கிறார்.

ஒரே ஆவியானவர்தான், இவைகள் அனைத்தையும் யார் யாருக்கு எந்த எந்த வரம் என்று தீர்மானித்துப் பகிர்ந்து கொடுக்கிறார். (1கொரி.12:8-11)

விளக்கம்:

- ஆதாம் ஏவாளிடம் கடவுளைப் பற்றி பொய்சொல்லி, உறவைப் பிரித்த மனிதகுல

எதிரியாகிய சாத்தானும், அவனோடுள்ள பேய்களும் இன்றைக்கும் அதே வேலைகளை செய்துவருகிறார்கள்.

- ஆகவே, யேசுவின் ரத்தத்தால் கழுவப்பட்டு, ஆவியானவரின் துணையோடு வாழ்கிற, யேசு கூட்டத்தார்களை, கடவுள் மீதுள்ள நம்பிக்கை, உறவுகளில் வளர்க்க, மேற்குறிப்பட்ட வரங்களை ஆவியானவர் பகிர்ந்து கொடுக்கிறார்.
- யேசுவை நம்பி வாழும் ஒவ்வொருவரும், தங்களுக்கு ஆவியானவர் கொடுத்த வரங்களைப் பற்றிப் புரிந்து பயன்படுத்தும்பொழுது, ஒரு உடலில் உள்ள பல்வேறு பாகங்களான, கை, கால், கண் செவி, மூக்கு போன்றவை இணைந்து செயல்படுவது போலவே, யேசுவின் உடல் போன்ற, யேசு கூட்டத்தார்கள் செயல்படி முடியும்.

ஏப்ரல்

கடவுளின் சுத்தமான மக்கள்

5. நம்பிக்கை இன்மையால் சுத்தம் இல்லாதவர்கள்.

ஆகவே, என்னுடைய அண்ணன் தம்பி, அக்கா தங்கைகளே! உங்களில் யாருடைய மனதிலும் கடவுள் காட்டும் வழிமீது நம்பிக்கையை இழக்கும்படியான கெட்ட சிந்தைகள் எதுவும் இல்லாமல் கவனமாக இருங்கள். இல்லையேல், கடவுளோடு உங்களுக்குள்ள உயிருள்ள உறவை நீங்கள் இழந்துபோவீர்கள்.

தீத்து 1:15

ஏனெனில், இது சுத்தம், அது சுத்தம் என்று, அவர்கள் சொல்வதெல்லாம் அர்த்தமில்லாததாகும். யேசு மேசியா மூலம் கடவுள் செய்த செயலை நம்பி வாழ்கிறபடியால், நாம் அவருடைய பார்வையில் சுத்தமாக இருக்கிறோம். ஆகவே, அதை நம்பி வாழ்கிறவர்கள் வாழ்க்கையை இதுபோன்ற எதுவும் தீட்டுப்படுத்த முடியாது. ஆனால், யேசு மேசியா மூலம் கடவுள் செய்தவைகளை நம்பாதவர்களுக்குதான் எல்லாம் தீட்டாக காணப்படுகிறது. ஏனெனில், அவர்களுடைய சிந்தனையும் அவர்களுடைய மனசாட்சியும் ஏற்கனவே தீட்டுப்பட்டிருக்கிறது.

விளக்கம்:

- மேலே உள்ள இரண்டு வசனங்கள் அடிப்படையில், கடவுள் யாரைச் சுத்தமுள்ளவர்களாகப் பார்க்கிறார்

என்றால், அவருடைய மகன் யேசு மூலம், மனிதர்களைச் சுத்தம் செய்ய அவர் செய்த செயல்களை நம்பி வாழ்கிறவர்களையே சுத்தமுள்ளவர்களாகப் பார்க்கிறார்.

- அவர் யேசு மூலம் செய்ததை, நம்பி வாழாத ஒவ்வொருவருமே கடவுள் பார்வையில் சுத்தமில்லாதவர்களே! அப்படிப்பட்டவர்களால் கடவுளோடு இணைந்து வாழவோ, பழகவோ முடியாது.
- அவர் யேசு மூலம் செய்ததை, நம்பி வாழ்ந்து, அந்த நம்பிக்கையை இழந்து போகிறவர்களும் அப்படியே, அவரோடுள்ள உயிருள்ள உறவை இழந்து போகிறார்கள்.

12 மன்னிப்புப் பெற்றதால் சுத்தமானவர்கள்:

"நான் குற்றமே செய்யாதவன்!" என்று சொல்லுகிறவர்கள், கடவுளுடைய வார்த்தையைப் பற்றிய அறிவு இல்லாமல், கடவுள் பொய்சொல்கிறார் என்று சொல்வதற்குச் சமம். எனவே, நம்முடைய குற்றங்குறைகளை ஒத்துக்கொண்டு, அவைகளை கடவுளிடம் சொன்னால், நம்முடைய குற்றங்குறைகள் அனைத்தையும் மன்னித்து, நம் வாழ்க்கையில் சுத்தமில்லாதவைகளை நம்மிடமிருந்து எடுத்துப்போட்டு, நம்மைச் சுத்தமுள்ளவர்களாக மாற்றுகிறார். ஏனெனில், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறதில், கடவுள் மிகவும் உண்மையுள்ளவர். (1John9-10)

அவ்வாறாக, யேசு மேசியாவின் ரத்தத்தை விலையாக கொடுத்து, நம்முடைய குற்றம் குறைகளுக்குரிய தண்டனையிலிருந்து நம்மை மீட்டு, நம்மை அவருக்குச் சொந்தமாக்கி இருக்கிறார். நம்மீது அவர் காட்டிய தாராளமான, அளவுகடந்த தயவினால்தான், கடவுளைப் பற்றிய, இந்த ஆழமான அறிவு நமக்குக் கிடைத்தது. அவரைப் பற்றிய உண்மைகளையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. (எபேசியர் 1:7-8)

விளக்கம்:

- மனிதர்களில் இருவருக்கிடையேயான உறவுகளில், யாரோ ஒருவர் செய்த தவறு, உறவுகளைப் பிரிப்பது போலவே, கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான உறவும் இருக்கிறது.

- இதில் மனிதர்களாகிய நாம் செய்த தவறுகளை ஒத்துக்கொண்டு கடவுளிடம் சொல்லும்பொழுது நமக்கு மன்னிப்பு கிடைக்கிறது.
- அதுவரை கடவுளோடு பழகத் தேவையான சுத்தம் நமக்கு இல்லாது இருந்தது. அவர் நம்மை மன்னித்துவிட்டார் என்ற உறுதி, அவரோடுப் பழகத் தேவையான சுத்தமுள்ள வாழ்க்கையை நமக்கு ஏற்படுத்தித் தருகிறது.

19 சுத்தமாகுதல் (மற்றவர்கள் கால்களைக் கழுவுதல்):

அதற்கு யேசு அவனிடம், ″தண்ணீரில் முழுக்கு எடுத்தவனுடைய உடல் முழுமையாக ஏற்கனவே சுத்தமாக இருக்கிறபடியால், கால்களை மாத்திரம் கழுவினால் போதும், ஆனால், உங்களுக்குள் இருக்கிற எல்லோரும் அப்படிப்பட்ட சுத்தமுள்ளவர்கள் இல்லை″ என்றார். (யோவான் 13:10)

விளக்கம்:

- நாம் கடந்த வாரத்தில் பார்த்ததுபோல, கடவுளிடம் நம் குற்றங்குறைகளை ஒத்துக்கொள்ளும்பொழுது, மன்னிப்புப் பெற்று சுத்தமானதற்கு அடையாளமாகவே தண்ணீரில் முழுக்கு எடுக்கிறோம்.

- ஆனால், அனுதின வாழ்வில் மற்றவர்களோடு பழகும்பொழுது ஏற்படும் குற்றங்குறைகளைக் கழுவ (ஒருவர் கால்களை இன்னொருவர் கழுவும்) இதுபோன்ற சடங்கை கடவுள் நமக்கு நியமித்து இருக்கிறார்.

- தண்ணீர் முழுக்கைச் (உண்மையான மனமாற்றம் இல்லாமல் வெறும் சடங்காகச் செய்வது போலவே, ஒருவொருக்கொருவர் ஏற்பட்ட மனத்தாங்கல்களுக்கு வருத்தம் தெரிவித்து, மன்னிப்புப் பெறாமல் இதையும் வெறும் சடங்காக கால்களைக் கழுவுவது உண்டு.

- ஆனால், அனுதின வாழ்வில் நாம் கடவுள் பார்வையில் சுத்தமுள்ளவர்களாக இருக்க, இன்னொருவர் நமக்குச் செய்த தீமைகள், கெடுதல்கள் நம் மனதிலிருந்து அகற்றிச் சுத்தமாக இருக்க அவர்களை மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும்.

26. யேசுவைப்போல் முழு வளர்ச்சி நோக்கிய ஆவிக்குரிய பயணம்.

ஏனெனில், நாம் அனைவரும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து, அவருடைய மகனாகிய யேசுவைப் போல முதிர்ச்சி அடைய வேண்டும் என்ற விருப்பத்திலேயே, அவரை நம்பி சுத்தமாக வாழ்கிற அனைவரும், அவருடைய மகனோடு ஒன்றாகச் சேர்ந்து, இணைந்து வாழ அப்படிச் செய்து இருக்கிறார். (எபேசியர் 4:13)

எனக்குப் பிரியமானவர்களே! இப்பொழுது நாம் கடவுளின் பிள்ளைகளாக இருக்கிறோம் என்பது உண்மைதான். ஆனால், நாம் யேசுவைப் பார்க்கும்பொழுது எப்படியிருப்போம், என்பது இன்னும் புரியாமல் இருக்கிறது. இருந்தபோதிலும், அவர் இப்பொழுது இருக்கிறபடியே நாம் அவரைப் பார்க்கப் போகிறபடியால், அவரைப் போலவே நாமும் இருப்போம் என்பது மாத்திரம் புரிகிறது. (1யோவான் 3:2)

விளக்கம்:

- மேலே குறிப்பிட்ட இரண்டு வசனங்களின் அடிப்படையில், நம்மைக் குறித்த கடவுளின் விருப்பம், நம்மையும் யேசுவைப் போல மாற்றுவதுதான்.
- ஆகவே, மற்ற மனிதர்களோடு ஒப்பிட்டு, நான் அவனைவிட நல்லவன், நான் அவளைவிட

நல்லவள், என்று நினைத்து வாழ்ந்தால், அது நம்மையே ஏமாற்றிக்கொள்வது போன்றதே.

- மாறாக, யேசுவுடைய குணங்களோடு நம்மை ஒப்பிட்டு, ஆவியானவர் உதவியால், கடவுளுடைய குணங்களைப் பெற்று, அதில் வளருவது அவசியம்.

மே:
கடவுளுடைய நாட்டின் குடிமக்கள்

3. இந்த உலக குடிமக்கள்

கணவனுக்கோ, மனைவிக்கோ உண்மையில்லாமல், மற்றவர்களோடு சேர்ந்து விபச்சாரம் பண்ணுகிறதுபோல, கடவுளைவிட உலக காரியங்கள் மீது ஆசை வைத்து வாழ்கிற நீங்கள், அவருடைய எதிரிகள்! (யாக்கோபு 4:4)

விளக்கம்:

- கடவுளைவிட இந்த உலக வாழ்வில் அதிக ஆசையா? கண்களில் பட்டதையெல்லாம் அனுபவிக்க ஆசையா? இந்த உலகத்தில் உங்களுக்குள்ளவைகளை வைத்துப் பெருமை அடிக்கிறீர்களா? எச்சரிக்கை! நீங்கள் கடவுளுக்கு எதிரிகள்!
- ஆகவே, இந்த உலக வாழ்க்கையைப் பெரிதாக மதித்து, கடவுளுக்கு எதிரிகளாக வாழாதீர்கள்!
- ஒரு கணவனும் மனைவியும் இணைந்து வாழ்வது போலவே, கடவுள் உங்களோடு இணைந்து வாழவிரும்புகிறார்.
- ஒரு மனைவி தன் கணவனைவிட்டு வேறொருவர் மீது ஆசைப்படுவதைப் பிடிக்காதது போலவே, கடவுள் தரும் பொருட்கள், சொத்து சுகங்கள் மீது ஆசை வைத்து கடவுளை மறப்பவர்கள் வாழ்க்கை இருக்கிறது.

10. இருள் உலக குடிமக்கள் (பேய்களின் ஆளுகையில் மனம்)

அதுமாத்திரமல்ல, உங்கள் சுயநலமான ஆசை விருப்பங்கள் மூலம் செய்கிற செயல்கள் எவைகள் என்று நீங்கள் எளிதாக கண்டறியலாம். அவைகள்: திருமண பந்தமில்லாத பாலுறவு, தவறான பாலுறவு, அப்படிப்பட்ட தவறான பாலுறவு எண்ணங்களிலேயே தொடர்ந்து வாழுதல்,

கடவுளைவிட மற்றவைகளை, உயர்வாக நினைத்து வணங்குதல், ஒருவர் மீது பகை வைத்துச் சபித்தல், அவர்கள் அழிந்து போக கெட்ட ஆவிகளை ஏவுதல், பொறமைப்படுதல், கோபமடைதல், மற்றவர்களோடு ஒத்துப்போகாமல் சண்டை போடுதல், உறவுகளைப் பிரித்து, தனக்கென ஒரு கூட்டம் சேர்த்தல்,

தனக்கு இருப்பதில் திருப்தியின்மை, குடித்து தன்னை மறந்திருக்கும் எண்ணம், குடித்து, கும்மாளமிடுதல், போன்றவைகளைச் செய்து வாழ்கிறவர்களுக்குக் கடவுளுடைய நாட்டை சொந்தமாக்க ஒருபோதும் முடியாது. அவ்வாறு செய்து வாழ்கிறவர்களை நான் முன்பு எச்சரித்ததுபோலவே, மீண்டும் ஒருமுறை எச்சரிக்கிறேன். (கலாத்தியர்5: 19-21)

அருகே இருப்பவைகளை வெளிச்சம் காண்பிப்பதுபோல, கடவுளுடைய உண்மையை மக்களுக்கு காண்பிக்க நான் இந்த பூமிக்கு வந்திருக்கிறேன். ஆகவே, என்னை நம்புகிறவர்கள்

உண்மையை அறியாத இருண்ட வாழ்க்கை வாழ மாட்டார்கள். (யோவான் 12:46)

விளக்கம்:

- மேலே குறிப்பிட்ட வசனங்களின் அடிப்படையில், கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வெளிச்சமாகவே, யேசு இந்த பூமியில் பிறந்தார்.
- யேசு நம் வாழ்வில் இல்லாவிட்டால், அது வெளிச்சமில்லாத இருளான வழியில் நடந்துபோவது போலவே இருக்கும்.
- அப்படிப்பட்டவர்கள் வாழ்வில் இருள் சூழ்ந்து மேற்குறிப்பிட்ட கெட்ட பழக்கங்கள் நிறைந்து காணப்படும்.
- அப்படிப்பட்டவர்கள் கடவுளுடைய நாட்டின் குடிமக்களாக வாழ முடியாது.

17. இரண்டு உலகங்களுக்கு இடையிலான வாழ்வு (குழப்ப மனநிலை):

ஏனெனில், இந்த உலக வாழ்க்கையை நன்றாக வாழவேண்டும் என்பதே அவர்கள் மனதின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. ஆகவே,
கடவுளை வணங்குவதற்கு பதிலாக, தங்கள் சொந்த உடல் ஆசைகளை நிறைவேற்றுவதில் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் செய்யும் வெட்கக்கேடான காரியங்களைப் பற்றி பெருமையாக வேறு, பேசிக்கொள்கிறார்கள். அவ்வாறான,
அவர்களுடைய வாழ்வின் முடிவில் அழிந்துபோகிற வாழ்க்கைதான் அவர்களுக்கு பரிசாக
காத்திருக்கிறது, (பிலிப்பியர் 3:19)

எனக்குப் பிரியமானவர்களே! இந்த உலகம் நீங்கள் தற்காலிகமாக தங்கும் இடம், இங்கே நீங்கள் பரதேசியை போன்றவர்கள். ஆகையால், நீங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை வாழமுடியாதபடி தடுக்கும், சுயநலமான ஆசைகளை விட்டுவிடுங்கள் என்று உங்களை கெஞ்சி கேட்கிறேன். (1பேதுரு @:!!)

எப்படியெனில், இந்த உலக மக்கள், அவர்கள் சொந்த ஆசைப்படி வாழவேண்டும் என தவறானவைகளை சிந்தித்து வாழ்கிறார்கள். அதுபோல நீங்கள் வாழாதீர்கள்! மாறாக, உங்களுக்கு எப்பொழுதும் நல்லது நடக்க வேண்டும் என்ற, கடவுளுடைய ஆசைகள், விருப்பங்கள், கடவுளுக்குப் பிடித்தவை எவைகள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளும்படியாக, நீங்கள் நினைக்கிற நினைவுகளில்

மாற்றம் வரவேண்டும்! அப்படியாக உங்கள் உள்ளம் புதிய திசையில் சிந்திக்க வேண்டும்! அதன் மூலமாக, உங்கள் வாழ்க்கை முழுவதும் மாற்றம்பெற வேண்டும். (ரோமர் 12:2)

விளக்கம்:

- இந்த உலகத்தில் நாம் வாழும்பொழுதே, கடவுளுடைய நாட்டின் பிரஜையாக, குடிமக்களாக வாழ்வது ஒருவித குழப்ப மனநிலைக்கு நம்மைத் தள்ளிய போதிலும், கடவுளைப் பற்றியும், அவருடைய நாடு, ஆளுகைபற்றித் தெரிந்துகொள்ளத் தெரிந்துகொள்ள நம்முடைய மனம் புதிய மனமாக மாறுகிறது.
- அதன் விளைவாக, கடவுளுடைய விருப்பங்களை அறிந்து, அவருடைய நாட்டுக்குரியவர்களாக

24 வெளிச்சத்தின் உலக குடிமக்கள் (கடவுளின் ஆளுகையில் மனம்)

அதற்கு யேசு அவர்களிடம், ″இருளில் நடக்கிறவர்கள் எங்கு போகிறார்கள்? என்று தெரியாமல் பயணம் செய்வது போலவே இந்த உலகத்தில் வாழும் அனேக மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வெளிச்சம் எவ்வளவு அவசியமோ, அதுபோலவே நான் இருக்கிறேன். எப்படியெனில், என்னை மேசியாவாக நம்பி வாழ்பவர்கள், அந்த வெளிச்சத்தைப் பெற்று, கடவுளைப் பற்றிய உண்மைத் தெரிந்து, தெளிவோடு வாழ்கிறார்கள். ஆகவே, என்னைப் பற்றி நீங்கள் கேள்விப்படும்பொழுதே, அந்த வெளிச்சத்தில் வாழுங்கள். நான் இன்னும் கொஞ்ச காலங்கள்தான் இங்கு இருக்கப் போகிறேன்″ என்றார். (யோ.12:35-36)

ஏனெனில், இரவு நேரம் முடிந்து விடியப்போகிறது போல, குற்றங்குறைகள்
சாபங்களால் அழிவுக்குள்ளான காலம் முடிந்து, குற்றங்குறைகள் சாபங்களிலிருந்து முற்றிலும் விடுதலையாகும் விடிவுகாலம் நெருங்கிவிட்டது. ஆகவே, மக்கள் இரவு நேரங்களில் சுத்தமில்லாத செயல்களைச் செய்வதுபோல, குற்றங்குறைகளோடு வாழும் பழைய பழக்கங்களை நாம் பழைய ஆடைகளைக் களைவதுபோல,
களைந்து விட்டுவிட்டு, புது ஆடை உடுத்துவது போலவும், ஆயுதங்களை எடுத்துக்கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாவது போலவும், கடவுள் தரும்

வெளிச்சத்தில் புதிய வாழ்க்கைக்குரிய செயல்களைச் செய்து வாழவேண்டும். (1கொரி.13:12)

இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை! ஏனெனில், பேய்களின் தலைவனும், ஒளியின் (கடவுளின்) தூதனைப்போல, தன்னை நல்லவனாகத்தானே, காட்டிக்கொள்கிறான். (2கொரி.11:14)

விளக்கம்:

- இருள் உலகின் ஆளுகை என்பது நம் மனது பேய்கள் அல்லது கெட்ட ஆவிகளின் ஆளுகையின் கீழ் இருப்பது; ஆகவே, நம் வாழ்க்கைப் பயணம் குழப்பம், அழிவு, மரணம் நோக்கியதாக அமைகிறது.
- ஆனால், கடவுளை நமக்குப் புரியப்பண்ணிய யேசுவோடு நாம் இணைந்தவுடன், நம் வாழ்வில் வீசும் அவருடைய ஒளியின் மூலம் குழப்பம் இல்லாத, அழிவு, மரணம் இல்லாத நம் எதிர்காலத்தை நம்மால் பார்க்க இயலுகிறது.
- அவர் மூலம், அவருடைய வசனம் மூலம் அவருடைய ஆவியானவர் மூலம் கிடைக்கும் வெளிச்சத்தில் நாம் வாழும்பொழுது, இருளின் ஆதிக்கம், பேய்களின் ஆதிக்கம் நம்மைவிட்டு விலகி, தெளிந்த ஒரு மனநிலையோடு நம்மால் வாழ முடிகிறது.

31. கடவுளுடைய நாட்டின் குடிமக்கள் (கடவுள் தந்த அதிகாரத்தோடான வாழ்வு)

எப்படியென்றால், அவர் சிலுவை மரத்தில் அடிக்கப்பட்டு, இறந்து, உயிரோடு எழுந்த பின்பு, அவர் உயிரோடு எழுந்ததை அவருடைய தூதுவர்கள் உறுதியாக நம்பும்படியாக பல வழிகளில், நாற்பது நாட்கள் அவர்களுக்கு காட்சி கொடுத்தார். மேலும், கடவுளுடைய நாடு, அவருடைய ஆளுகை, அங்குள்ளவைகள் பற்றியெல்லாம் அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார். (அப்போ.1:3)

விளக்கம்:

- நாம் யேசுவுக்குள் மறுபடி பிறந்து, கடவுளுடைய நாட்டின் குடிமக்களாக மாறிய பின்பு, நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தால்கூட, நம் வாழ்வை ஆள்வது யேசு ராஜாவே!
- ஆகவே, இந்த உலகத்தின் காரியங்களையும், பாவங்களையும், யேசுவோடு இணைந்து வாழ்வதைத் தடுக்கும் எதிரிகளையும் அவர் எப்படி வெற்றிபெற்றாரோ, அதுபோலவே நாமும் வெற்றி பெறுவதே அவர் விருப்பம்.
- அப்படியான வெற்றிக்குத் தேவையான அறிவையும், சக்தியையும், அதிகாரத்தையும் அவருடைய நாட்டிலிருந்து பெற்று வெற்றிபெறுவதே கடவுளின் விருப்பம்.

ஜூன்
கடவுள் நகரத்திற்குரியவர்கள்

7. ஆபிரகாம் எதிர்பார்த்து வாழ்ந்த நகரம்

கடவுள் ஆபிரகாமிடம், ″உன்னுடைய சந்ததிகளுக்குச் சொந்தமாக நான் ஒரு நாட்டைத் தருவேன்! ஆகவே, நீ இங்கிருந்து கிளம்பிப்போ!″ என்று சொன்னபொழுது, தான் போகுமிடம் தெரியாமல் இருந்தாலும், கடவுள் மேலிருந்த நம்பிக்கையினால் அவர் சொல்லுக்குக் கீழ்படிந்து, அதுவரை குடியிருந்த நாட்டைவிட்டுக் கிளம்பிப் போனான்.

கடவுள் மேலிருந்த நம்பிக்கையினால் அவர் வாக்குக்கொடுத்த அந்த நாட்டிற்கு வந்தான். கடவுள் தனக்குக்கொடுத்த வாக்கில் தன் மகன் ஈசாக்கிற்கும், பேரன் யாக்கோபிற்கும் பங்கு இருக்கிறது என்பதைப் புரிந்தான். ஆகவே, மகன் ஈசாக்கோடும், பேரன் யாக்கோபோடும் அந்த நாட்டுக்குச் சொந்தமில்லாவனாக, அங்கு கூடார வீடுகளைப் போட்டுக் குடியிருந்தார்கள்.

ஏனெனில், அவர்கள் தங்குவதற்கு, ஒரு நிரந்தரமான நகரத்தைக் கடவுளே திட்டம் போட்டுக், கட்டிவைத்திருக்கிறார் என்ற எதிர்பார்ப்பு அவனுக்கு இருந்தது. (எபிரேயர் 11:8-10)

மாறாக, அதைவிடச் சிறப்பான, கடவுளே அவர்களுக்காக மேல் உலகத்தில் ஆயத்தம் பண்ணிய நகரத்தில் வாழ்வதையே பெரிதாக விரும்பினார்கள். ஆகவே, கடவுள் தன்னைப்பற்றிச்

சொல்லும்பொழுது, ″நான் ஆபிரகாமின் கடவுள்! ஈசாக்கின் கடவுள்! யாக்கோபின் கடவுள்!″ என்று சொல்வதற்கு வெட்கப்படவில்லை. (எபிரேயர் 11:16)

விளக்கம்:

- ஆபிரகாமிற்கு என்று சொந்த மக்கள், சொந்த இனம், சொந்த ஊர் இருந்தபோதிலும், கடவுள் அவைகளை எல்லாம் விட்டுவிட்டு, அவரே உருவாக்கிய நகரத்தை நோக்கிப் பயணிக்கும்படி கூப்பிடுகிறார். கடவுள் சொன்னதை நம்பி அவரும் பயணத்தைத் துவக்குகிறார்.
- ஆனால், அவருடைய மரணம் வரை, ஆபிரகாம் அந்த நகரத்தைப் பார்க்காத போதிலும், மரணம் வரை, கடவுள் சொன்னதை நம்பி வாழ்கிறார்.
- அவர் மரித்த பின்பு, ஆபிரகாமின் மடி என்று சொல்லப்படும் நகரத்திற்கு அல்லது நாட்டுக்கு அவரே முதன்மையானவராக இருக்கிறார்.
- ஆகவேதான், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மரித்தபோதிலும், நான் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என்று குறிப்பிடுகிறார்.

14. இஸ்ரவேல் மக்கள் எதிர்பார்த்து வாழ்ந்த நகரம்

அவர்களைப் பரிசுத்த ஜனமென்றும்,
கர்த்தரால் மீட்கப்பட்டவர்களென்றும் சொல்லுவார்கள்;
நீ தேடிக்கொள்ளப்பட்டதென்றும், கைவிடப்படாத
நகரமென்றும் பெயர்பெறுவாய். (ஏசாயா 62:12)

நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின்
நடுவிலே வாசம்பண்ணுவேன்; எருசலேம் சத்திய
நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம்
பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று
கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 8:3)

விளக்கம்:

- ஆபிரகாமின் வழியில் தோன்றிய இஸ்ரவேல் சமுதாயத்திற்கு, மேலே குறிப்பிட்ட வசனங்களின்படியாக கடவுள் மீது ஒருவித நம்பிக்கை இருந்தது, இன்னும் இருக்கிறது.
- கடவுள் நம் வாழ்க்கையைச் சுத்தமாக்கி இருக்கிறார்!
- கடவுள் நம்மைத் தேடிவந்து, அழிவிலிருந்து காப்பாற்றியிருக்கிறார்!
- கடவுள் நம் நகரத்தைக் கைவிடமாட்டார்!
- போன்ற நம்பிக்கையோடு வாழவைத்து இருக்கிறார்.

21. பூலோக எருசலேம்

ஆகவே, இனிமேல் மற்ற சமுதாய மக்களாகிய உங்களை கடவுளுடைய நாட்டின் குடிமக்களாக வாழ தகுதியில்லாதவர் என்றோ அல்லது கடவுள் தம்முடைய மக்களுக்காக வைத்துள்ளவைகளை பெற்றுக்கொள்ளத் தகுதியில்லாத அந்நியர்கள் என்றோ, எவரும் சொல்லமுடியாது. மாறாக, கடவுளின் சுத்தமான மக்கள் வாழ்கிற நகரத்தில் சேர்ந்த உங்களை, அவரின் சொந்த பிள்ளைகள் என்றுதான் சொல்வார்கள். (எபேசியர் 2:19)

ஆனால், கடவுளைச் சந்திக்க அதுபோன்ற சீனாய் மலைக்கு நீங்கள் வராமல், அதைவிடச் சிறப்பான மலையான சீயோனுக்கு வந்திருக்கிறீர்கள். இதற்கு உயிருள்ள கடவுளுடைய நகரம் என்றும், மேல் உலக எருசலேம் நகரம் என்றும் பெயர். இங்கு கோடிக்கணக்கான கடவுள் தூதர்கள் சந்தோசமாகக் கூடி வருகிறார்கள். (எபிரேயர் 12:22)

விளக்கம்:

- இஸ்ரவேலருக்கு ஒரு நகரத்தின் மீதான நம்பிக்கை கடவுள் ஏற்படுத்தியதுபோல, மற்ற சமுதாய மக்களாகிய நமக்கு மேற்குறிப்பட்ட வசனங்களின்படியான நம்பிக்கையை ஏற்படுத்தித் தருகிறார்.
- அதற்கு உயிருள்ளவர்கள் வாழுகிற நகரம்!
- கடவுளுடைய நகரம்!
- கோடிக்கனக்கான கடவுள் தூதர்கள் கூடிவருகிற நகரம்!

- சந்தோசமான நகரம்!
- கடவுளுடைய மக்களின் நகரம்!
- கடவுளுடைய சொந்த பிள்ளைகளின் நகரம்!
- என்றெல்லாம் பெயர்பெற்ற இந்த நகரத்தை எதிர்பார்த்து நாம் வாழ்கிறோம்.

28. மேலோக எருசலேம்

ஏனெனில், இந்த உலகில் உள்ள எந்த நகரில் நாம் வாழ்ந்தாலும், நிரந்தரமாக வாழும் இடம் இங்கு கிடையாது. மாறாக, நிரந்தரமாக வாழ்ப்போகும் ஒரு மேலோக நகரத்திற்காக நாம் காத்திருக்கிறோம்.
(எபிரேயர் 13:14)

விளக்கம்:

- புதிய எருசலேம் என்பது தேவனுடைய இறுதித் திட்டம்.
- யேசுவை நம்பி வாழ்கிறவர்களுக்கான நித்திய வீடு இது.
- இங்கு பாவம், மரணம், துக்கம் என்று எதுவும் இருக்காது.
- ஏனெனில், இங்கு மனிதர்கள் எவரும் ஆளுகை செய்யமாட்டார்கள்.
- மக்களுடன் கடவுள் என்றென்றும் இருப்பார்.

ஜூலை

கடவுளின் சொந்தப் பிள்ளைகள்

5 கடவுள் சாயலில் மனிதன்:

காலங்காலமாக வாழும் கடவுள் மனிதனை எப்படிப் படைத்தார் என்றால், பூமியிலிருந்த மண்ணை எடுத்து அவனுடைய உடலை உருவாக்கி, அவனை உயிரோடு வாழவைக்கும் காற்றை அவன் மூக்கில் ஊதினார். அவ்வாறு அவர் ஊதியவுடன், அவன் உயிருள்ள ஆவியோடு (ஆத்துமாவோடு) வாழ ஆரம்பித்தான். (ஆதி.2:7)

ஏனெனில், கடவுள் ஆவியின் சாயலாக இருக்கிறார். ஆகவே, அவருடைய ஆவியானவர் வழிநடத்துகிறபடியும், அவர் சொல்லிக்கொடுக்கிற உண்மையின்படியும், அவரை வணங்குவதே உண்மையான வழிபாடு. அவ்வாறாக, ஆவியானவரின் வழிநடத்துதலின்படி வழிபடுவதையே, என்னுடைய அப்பாவாகிய கடவுள், விரும்பி ஏற்றுக்கொள்ளுகிற வழிபாடு. அவரை அவ்வாறு வழிபடும் காலம், இப்பொழுதே வந்திருக்கிறது." என்றார்–யேசு. (யோவான் 4:23-24)

விளக்கம்:

- மேலே குறிப்பிட்ட இரண்டு வசனங்களின்படி, கடவுளை வணங்க, அவருடைய சாயலில் மனிதனை அவர் படைக்கிறதையும், அன்பு, இரக்கம், தயவு, சாந்தம், பொறுமை, உண்மை

போன்ற அவருடைய குணங்களோடு படைக்கிறதையும் பார்க்கிறோம்.

- மனிதனுடைய உடல் மண்ணிலிருந்து வந்தபோதிலும், உள்ளான நிஜமனிதன் கடவுளின் நல்ல குணங்களல் உருவாக்கப்படுகிறதை கவனிக்கவும்.
- ஆகவே, படைப்பில் கடவுள் மனிதனைக் குறைவு, குற்றம் உள்ளவனாகப் படைக்காமல், தன்னைப்போல நல்ல குணங்களோடு படைத்தார் என்பதை நாம் உறுதியாக புரிந்து கொள்ளலாம்.

12 கடவுள் சாயலை இழந்த மனிதன்

பின்பு, கடவுள் ஆதாமிடம், ″சாப்பிடக்கூடாது என்று நான் சொன்ன மரத்தின் பழத்தை, உன் மனைவியின் பேச்சைக்கேட்டு நீ சாப்பிட்டபடியால், உன் மூலமாக இந்த பூமிக்கு சாபம்தான்! ஆகவே, நீ உயிரோடு இருக்கும்வரை கஷ்டப்பட்டு வேலைசெய்துதான் சாப்பிடுவாய்.

எப்படியெனில், முற்களும், முற்புதர்கள் வளரும் நிலத்தில் நீ விவசாயம் செய்து சாப்பிடுவாய்.

மண்ணிலிருந்து உன் உடலை நான் படைத்தபடியால் உன் உடல் மண்ணிற்கே திரும்பிப் போகும்! அதுவரை, வியர்வை சிந்தி, வேலைசெய்துதான் நீ சாப்பிடுவாய்″ என்றார். (ஆதி.3:17-19)

விளக்கம்:

- மேலுள்ள வசனங்களின் அடிப்படையில், நல்ல குணங்களோடும், படைப்பைப் பராமறித்து, ஆண்டுகொள்ளும் கடவுள் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் அதை இழந்துபோகிறதை நாம் கவனிக்கலாம்.
- ஒரு ராஜ வாழ்க்கைக்காக படைக்கப்பட்ட மனிதன், சபிக்கப்பட்ட படைப்போடு/இயற்கையோடு போராடி, வியர்வை சிந்தி, கஸ்டப்பட்டு உழைத்துப் பிழைக்கும் நிலைக்குள்ளாகிறதைக் கவனிக்கவும்.
- கடவுளுடைய நல்ல குணங்களை இழந்ததால், போட்டி, பொறாமை, சண்டை சச்சரவுகளோடான வாழ்க்கை!

19 கடவுள் சாயலைத் திரும்பப் பெறும் மனிதன்

அது எப்படி என்றால்: யேசு மேசியா இந்த பூமிக்கு வந்து வாழ்ந்த போது, தான் கடவுள் என்ற தன்மையில் இருந்தபொழுதிலும், கடவுள் என்ற தன்மையில் தனக்குள்ள எதையும் அவர் பற்றிப்பிடித்துக் கொள்ளவில்லை.

மாறாக, நம்மைப்போல ஒரு சாதாரண மனிதனாகி, ஒருவருக்கு இன்னொருவர் அடிமையாக வேலை செய்யும் நிலையைத் தாமாகவே தெரிந்துகொண்டார்.

அவ்வாறு, அவர் தன் நிலையைத் தானாகவே தாழ்த்தி,
ஒரு சாதாரண மனிதனாக, சிலுவை மரத்தில் தான் சாகிற வரை கடவுளுக்குக் கீழ்படிந்து வாழ்ந்தார். (பிலி.2:6-8)

விளக்கம்:

- கடவுள், தன் மகனாக யேசுவை இந்த பூமிக்கு அனுப்பியதன் பிரதானமான நோக்கம் மனிதர்கள் இழந்துபோன அவருடைய ஆவியின் சாயலைத் திரும்பக்கொடுத்து, தன்னோடு பழக வைப்பதே.
- ஆகவே, சாபத்துக்குள்ளான பூமியில், சாபத்துக்குள்ளான மனித சாயலில், தன் மகனைப் பிறக்கவைத்து, அவர் மரணம் மூலம், சாபத்தை நீக்கி, கடவுளுடைய புண்ணியங்கள் அல்லது ஆசீர்வாதங்களை மனிதர்கள் பெற்று வாழ்வதே, அவருடைய விருப்பம்.

- ஆகவே, யேசு மூலம் கடவுள் செய்ததை நம்பி வாழ்கிறவர்களுக்கு அவருடைய ஆவியானவரைக் கொடுத்து, அவருடைய நல்ல குணங்களை மீண்டும் பெற்று வாழவைப்பதே, கடவுள் திட்டம்.

26 கடவுள் பிள்ளை என்ற இழந்த உரிமையைத் திரும்பப் பெறும் மனிதன்

இவ்வாறாக, யேசு மேசியா நமக்காகச் செய்த செயல் மூலமாக, கடவுளுடைய பிள்ளைகள் என்ற உரிமையை நாம் பெறுவது, கடவுளுக்கு விருப்பமானதாகவும், அவர் மனதிற்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் இருந்தது. ஆகவேதான், அவர் நம்மை முன்கூட்டியே அவ்வாறு தெரிந்தெடுத்தார். (எபே.1:5)

அவ்வாறாக நாம் அவருடைய பிள்ளைகள் ஆகி, யேசு மேசியாவோடு சேர்ந்து நாமும், கடவுளுடைய வாரீசுதாரர்கள் ஆகிறோம். அப்படியெனில், யேசு மேசியா நன்மைகளைச் செய்து எவ்வாறு துன்பப்பட்டாரோ, அவ்வாறு நாமும் துன்பப்பட்டால் தானே, அவரோடுகூட சேர்ந்து, விவரிக்க முடியாத காலங்காலமாக வாழும் வாழ்விலும் பங்கடைய முடியும். (ரோ.8:17)

விளக்கம்:

- இவ்வாறாக, நாம் இழந்த கடவள சாயலை, நல்ல குணங்களை, படைப்பின் மீதான பராமறிப்பு, ஆளுகையை நாம் யேசு மூலம் திரும்பப் பெற்று, அவருக்குப் பிள்ளைகாக வாழ்கிறோம்.
- அவ்வாறு வாழ நம்முடைய பாவ சுபாவத்திற்கு இயலாது என்பதைப் புரிந்த கடவுள், அவருடைய ஆவியானவரை நமக்குள் குடியிருக்க வைத்து, அவர் உதவியால் நம்மை அவருடைய பிள்ளைகளாக வாழ வைக்கிறார்.

- ஆகவே, நம்முடைய பாவ சுபாவத்தின் ஆளுகையில் வாழாமல், நம்மைப் புதிய மனிதனாக்கிய ஆவியானவரின் ஆளுகையில் வாழும்பொழுது, யேசு வாழ்ந்தது போல நாமும் இந்த பூமியில் வாழலாம்.

ஆகஸ்ட்

கடவுளிடம் உள்ளவைகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்கள்

2. படைப்பில் கடவுள் உலகோடு இருந்த தொடர்பு

பின்பு, காலங்காலமாக வாழும் கடவுள், கிழக்குப் பகுதியில் ஏதேன் என்ற ஒரு தோட்டத்தை உருவாக்கி, தான் படைத்த அந்த முதல் மனிதனை அங்கு குடியிருக்கச் செய்தார்.

அதுமாத்திரமல்ல, பார்ப்பதற்கு அழகாகவும், சாப்பிட நல்ல ருசியுள்ள, விதவிதமான பழங்களைத் தரும் மரங்கள் அனைத்தையும், நிலத்தில் முளைக்கச் செய்தார். அதோடு, உயிரோடு வாழவைக்கும் பழங்களை விளைவிக்கும் மரத்தையும்; நல்லது எது? கெட்டது எது? என்ற அறிவை கொடுக்கும் பழங்களை விளைவிக்கும் மரத்தையும், அந்தத் தோட்டத்தின் நடுவில் முளைக்கச் செய்தார்.

அந்த தோட்டத்தில் உள்ள செடி, கொடி, மரங்களுக்கு தண்ணீர் கிடைக்கத்தக்கதாக, அந்த ஏதேன் தோட்டத்திலிருந்து, ஒரு ஆறு ஓடத்துவங்கியது. அது நான்கு ஆறுகளாகப் பிரிந்து ஓடியது. (ஆதி.2:8-10)

விளக்கம்:

- இந்த வசனத்தின் அடிப்படையில், மனிதனை சாவாமல் வாழவைக்கும் ஒரு படைப்பை கடவுள் உருவாக்கிக் கொடுத்ததைக் கவனிக்கவும்.

- இது, கடவுளுக்குரிய சாவாமல் வாழும் தன்மையை மனிதனுக்குக் கொடுக்க, அவருடைய உலகோடு இருக்க வேண்டிய தொடர்பை வெளிப்படுத்துகிறது.
- மரணத்தைக் குறித்த எச்சரிப்பைப் பின்னர் கொடுத்த போதிலும், உயிரோடு வாழவைக்கும் கனிதரும் மரம் மூலம், கடவுள் உலகோடு வைத்துக்கொள்ளும் தொடர்பால், மரணமில்லாமல் காலங்காலமாக வாழும் ஒரு வாழ்வை மனிதர்களுக்கு முன் வைக்கிறார்.

9. கடவுள் உலகோடு இழந்த தொடர்பு

அதோடு, உயிரோடு வாழவைக்கும் பழங்களை விளைவிக்கும் மரத்தையும்; நல்லது எது? கெட்டது எது? என்ற அறிவை கொடுக்கும் பழங்களை விளைவிக்கும் மரத்தையும், அந்தத் தோட்டத்தின் நடுவில் முளைக்கச் செய்தார். (ஆதி 3:9ஆ)

விளக்கம்:

- மரணத்தைக் குறித்த எச்சரிப்பைக் கடவுள் முதல் மனிதனுக்கும், மனுசிக்கும் கொடுத்தபோதிலும், அவர்கள் அந்த எச்சரிப்பை மீறி, கடவுள் மீது சந்தேகப்பட்டுச் செய்த செயலால், கடவுளோடும், அவர்களை காலங்காலமாக வாழவைக்கும் அவர் உலகோடுமான தொடர்பை அல்லது உறவை இழந்து போகிறார்கள்.
- “நீ எங்கே இருக்கிறாய்?“ என்று கடவுள் கூப்பிடும் அளவிற்கு கடவுளை விட்டு விலகி கடவுள் உலகிலிருந்து பிரிந்து நின்றான்.
- கடவுளைப் பற்றிய உண்மையைப் புரியாத மக்கள் இன்றும் மனுக்குல எதிரியின் பொய்களை நம்பி, கடவுளைவிட்டும், அவர் உலகத்தைவிட்டும் பிரிந்து நிற்கிறார்கள்.

16. கடவுள் உலகில் மனிதர்களுக்குள்ள புண்ணியம்/ஆசீர்வாதம்:

″மரத்தில் தூக்கி கொல்லப்பட்டவன் சபிக்கப்பட்டவன்″ என்று எழுதி இருக்கிறபடியால், யேசு நமக்காக சிலுவை மரத்தில் தொங்கி மரித்ததை நம்புவதின் மூலம், சட்டதிட்டங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து வாழ முடியாமல், சாபத்தின் கட்டிலிருந்த நம்மை விடுவித்து, கடவுளின் புண்ணியம் பெற்றவர்கள் ஆகிறோம் என்பது புரிகிறதுதானே? இதன் அடிப்படையிலேயே, ஆபிரகாமிற்குக் கிடைத்த கடவுளின் புண்ணியம், யேசு மேசியாவுடன் இணைவதால் இந்த உலகிலுள்ள அனைத்து சமுதாய மக்களுக்கும் கிடைக்கிறது. சுத்தமான ஆவியானவர்தான், கடவுள் நமக்குத் தருவேன் என்று வாக்குறுதி கொடுத்த அந்த புண்ணியம். (கலாத்தியர் 3:13-14)

விளக்கம்:

- கடவுள் மனிதர்களுக்குத் தரும் மிகப்பெரிய ஆசீர்வாதம் அல்லது புண்ணியம் என்பது, அவருடைய மகன் மூலம் நம்மைச் சுத்தமாக்கி, அவருடைய ஆவியானவரை நமக்குள் வாழவைப்பதுதான்.
- அவருடைய ஆவியானவர் நமக்குள் வந்து வசிப்பது, அவர் நம்மைச் சொந்தப்பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.
- நாம் கடவுளுடைய சொந்தப்பிள்ளை என்ற உரிமையைப் பெறும்பொழுது அவருடைய

ஆசீர்வாதங்கள் அனைத்திலும் பங்குபெறும் உரிமை பெறுகிறோம்.

- முக்கியமாக, தெய்வீக குணங்கள், வறுமை இல்லாத வாழ்வு, தெய்வீக ஆரோக்கியம், தெய்வீக சுகம், தெய்வீக சந்தோசம், சமாதானம் போன்றவைகள் அனைத்தையும், அவருடைய ஆவியானவர் மூலம் பெற்று அனுபவிக்கிறோம்.

23. கடவுள் உலகில் உள்ளவைகளை பெற்றுக் கொள்ளும் தகுதி:

அதாவது, கடவுள் சொல்லுக்குக் கீழ்படிந்து நடக்காத ஒரு மனிதனாலே, அத்தனை பேர்களுக்கும் குற்றம்குறையுள்ளவர்கள் என்ற பட்டம் கிடைத்ததுபோல, கடவுள் சொல்லுக்கு, கீழ்படிந்து வாழ்ந்த ஒரே ஒரு யேசு மேசியாவாலே, (அதை நம்புகிற) அனைவரும் கடவுள் பார்வையில் சரியானவர்கள் என்று பெயர்பெற வழிபிறந்தது. (ரோமர் 5:19)

ஆகவேதான், கடவுளுடைய ஆவியானவரால் எவரெல்லாம் வழிநடத்தப்படுகிறார்களோ, அவர்கள் அனைவரும் கடவுளுடைய பிள்ளைகள் ஆகிறார்கள்.

எப்படியெனில், கடவுள் மோசே மூலம் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த சட்டதிட்டங்களுக்கு பயந்து, முன்பு அதற்கு அடிமையாக வாழ்ந்தோம். ஆனால், இப்பொழுது பயமில்லாமல் வாழ்வதற்காகவே ஆவியானவரைப் பெற்றிருக்கிறோம். மேலும், அந்த ஆவியானவர் உங்களுக்குள் கிரியை செய்கிறபடியால், நீங்கள் கடவுளுடைய பிள்ளைகள். ஆகவே, கடவுளை ″அப்பா″ என்று நீங்கள் கூப்பிட அந்த ஆவியானவர் உதவிசெய்கிறார். (ரோமர் 8:14-15)

ஆனால், கடவுள் நம்மீது தயவு காட்டினபடியால், அப்படியான சிறப்பான வாழ்வை இலவசமாகப் பெற்றோம். எப்படியென்றால், நம்மால் தப்பிக்க

முடியாமல் போன அந்த அடிமை வாழ்விலிருந்து, யேசு மேசியா மூலமாக நாம் விடுதலைபெற்று, அவரோடு இணைந்து கடவுள் பார்வையில் சரியானவர் என்ற பெயரையும், புகழையும் பெருகிறோம். (ரோமர்3:24)

விளக்கம்.

- இவ்வாறாக, கடவுள் உலகில் உள்ள நன்மைகளை நாம் பெற்றுக்கொள்ளும் தகுதி, யேசு மூலம், கடவுள் நம்மீது காட்டிய தயவினால் மட்டுமே கிடைக்கிறது.
- இதற்காக நாம் செய்ய வேண்டியது, அவர் செய்தவைகளை நம்பி, அவருடைய ஆவியானவர் நம்மை வழிநடத்த நம்மை விட்டுக்கொடுப்பது மாத்திரமே.

30. கடவுள் உலகில் உள்ளவைகளை பெற்று, மற்றவர்களுக்கு கொடுக்கும் தகுதி

உங்களைப் பற்றி மக்களுக்குச் சொல்லிக்கொடுக்க, நீங்கள் எப்படி என்னை இங்கு அனுப்பினீர்களோ, அதுபோலவே நானும் அவர்களை இந்த உலக மக்களுக்குள் அனுப்புகிறேன். (யோவான் 17:18)

ஆகவே, யேசுவின் கூட்டத்தில் முதலாவது வேலையாக, யேசுவின் தூதுவனாக செயல்படுவதையும்; இரண்டாவது வேலையாக, கடவுள் சொன்னதைச் சொல்லுகிற வேலையையும்; மூன்றாவதாக, மக்களுக்கு கடவுளின் புத்திமதிகளை சொல்லிக்கொடுக்கிற வேலையையும்;

அடுத்தது, மக்கள் அதிசயப்படத்தக்க செயல்களைச் செய்கிற வேலையையும்; அடுத்தது, வியாதிகளைக் குணப்படுத்துகிற வேலையையும்; அடுத்தது, மற்றவர்களுக்கு உதவி செய்கிற வேலையையும்; அடுத்தது, தலைமைத்துவ வேலையையும்; அடுத்தது, தெரியாத மொழிகளைப் பேசுகிற வேலைகள்

என்று பல்வேறு வேலைகளை யேசு கூட்டத்தார்களுக்குப் பகிர்ந்து கொடுத்து இருக்கிறார். (1கொரிந்தியர் 12:28)

விளக்கம்:

- யேசுவை கடவுள் இந்த பூமிக்கு அனுப்பி மக்களை ஆசீர்வதித்ததுபோலவே, நம்மையும் பல்வேறு மக்களிடம் அனுப்பி, நம் மூலம் மற்றவர்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார்.
- அதனால்தான், அவரை நம்பி வாழ்கிற நம்மை, இந்த உலக மக்களுக்கு வாழ்க்கையில் சுவைதரும் உப்பாக இருக்கச் சொல்கிறார்.
- கடவுளைப் பற்றிப் புரியவைக்கும் வெளிச்சமாக இருக்கச் சொல்கிறார்.
- இதற்காகவே, ஐந்து வகை ஊழியத்தையும், பல வரங்களோடு நம்மைச் செயல்பட வைக்கிறார்.

செப்டம்பர்

கட்டிடத்தை முழுமையாகத் தாங்கி நிற்கும் முக்கியமான கல்-யேசு மேசியா

6 மனித இனத்தைக் கட்டி எழுப்பும் முக்கிய கல் முதல் ஆதாம்

ஆகவேதான், ″முதல் மனிதன் ஆதாமால், உயிர்வாழும் ஆத்துமா கிடைத்தது. ஆனால், யேசு மேசியாவாகிய கடைசி ஆதாமால், உயிர்கொடுக்கும் ஆவி கிடைத்தது″ என்று கடவுள் புத்தகத்தில் எழுதி இருக்கிறது. (1 கொரிந்தியர் 15:45)

விளக்கம்:

- ஒரு முக்கியமான கல், ஒரு பெரிய கட்டிடத்தையே தாங்கி நிற்பதுபோல், கடவுள் மனித இனத்தைப் படைக்க முதல் மனிதனாக ஆதாமைப் படைத்தார்.
- அந்த ஒரு மனிதனிலிருந்து தோன்றிய மனித குலம் இப்பொழுது கோடி, கோடி மக்களாக பெருகி நிற்கிறது.
- அந்த ஆதமிலிருந்து நாம் அனைவரும், பிறக்கிறோம், வளர்கிறோம், முதுமை அடைந்து மரிக்கிறோம்.
- இது ஒரு இயற்கையாக மாறிப்போனாலும், கடவுளுடைய பிரதான திட்டம் இதுவல்ல.
- அவருடைய பிரதான திட்டத்திலிருந்து விலகிப்போன மனிதர்களை அப்படியே விட்டுவிடாமல், மீண்டும் அவருடைய

திட்டத்துக்குள் கொண்டுவருவது அவருக்குப் பிடித்த செயல் என்று வேதம் கூறுகிறது.

13 புதிய மனித இனத்தின் முக்கிய கல் கடைசி ஆதாம், யேசு:

ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான். (1சாமு.28:16)

ஆகவேதான், ″முதல் மனிதன் ஆதாமால், உயிர்வாழும் ஆத்துமா கிடைத்தது. ஆனால், யேசு மேசியாவாகிய கடைசி ஆதாமால், உயிர்கொடுக்கும் ஆவி கிடைத்தது″ என்று கடவுள் புத்தகத்தில் எழுதி இருக்கிறது. (1 கொரிந்தியர் 15:45)

விளக்கம்:

- கோடிக்கோடியான மக்களை உருவாக்க ஒரு மனிதனைப் பயன்படுத்தியது போலவே, தன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்காமல் கெட்டுப்போன அந்த மனித இனத்திலிருந்து, ஒரு புதிய மனுக்குலத்தைப் படைக்க, யேசு என்ற தன் மகனை ஒரு மனிதனாகப் பிறக்கச் செய்தார்.
- பாவத்தால் கடவுளோடு தொடர்புகொள்ள முடியாமல், செத்த வாழ்க்கை வாழ்கிற மனிதர்களின் ஆவிக்கு அந்த யேசுவே உயிர்கொடுக்க முடியும்.

- அந்த யேசுவோடு இணைகிற மனிதர்களைக கடவுள் தன்னோடு பழகத் தகுதிவாய்ந்தவர்களாக மாற்றுகிறார்.
- அவ்வாறாக தான் படைக்கும் அந்தப் புதிய மனித குலத்துக்கு மரணத்தை வெற்றிபெறும் காலங்காலமான வாழ்க்கை, கடவுளின் குணங்கள் நிறம்பிய புதுவாழ்வு, போன்ற அனேக ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார்.

எப்படியெனில், முதன் முதலில் ஒரு மனிதன் செய்த தெய்வ குற்றத்தினாலே, மனித இனம் முழுமையும் குற்றங்குறை உள்ளவர்களாகி, சாவைச் சந்திக்க வேண்டியதாயிற்று. (ரோமர் 5:12)

விளக்கம்:

- முதல் மனிதனான ஆதாம் மூலம் நாம் துவங்கும் வாழ்க்கையில் பல இன்ப துன்பங்கள் இருந்தாலும், அது ஒரு நாள் முடிவுக்கு வருகிறது.
- பிறந்த நாளோடு துவங்கும் வாழ்க்கை இறந்த ஒரு நாளோடு முடிவுக்கு வருகிறது.
- பிறந்த நாளுக்கும், இறந்த நாளுக்கும் இடையிலான வருடங்களே நம் வயது.
- அதில், சிறுபருவம், வாலிபம், படிப்பு, வேலைகள், குடும்பம், பிள்ளைகள், சொத்து சுகங்கள், பணிஓய்வு, பேரப்பிள்ளைகள், முதுமை, என்ற பலகட்டங்களை நாம் கடக்கிறோம்.
- இதற்கு இடையில், நம் வாழ்வைப் புதிதாக்கும் யேசுவை நாம் சந்திக்காவிட்டால், வாழ்க்கை ஒரு வெறுமையிலும், எல்லாக் கஷ்டங்களும் எதற்காக என்ற கேள்வியிலும் முடிந்துவிடும்.

27 கடைசி ஆதாம், யேசுவுக்குள்ளான வாழ்க்கை:

ஏனெனில், யேசு மேசியாவுடன்
இணைந்த ஒருவருடைய வாழ்க்கை புதிய ஒரு வாழ்க்கையாக மாறுகிறது. அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த, பழைய பழக்க வழக்கங்கள் முற்றிலும் இல்லாமல், புதிய ஒரு வாழ்க்கை தொடங்குகிறது. ஆகவே, சாதாரண மனிதர்கள், மற்றவர்களைப் பார்க்கும் பார்வையில், ஒருவரையும் இனி நாங்கள் பார்ப்பதில்லை. ஏனெனில், யேசு மேசியாவை நம்பாத காலத்தில், அவரையும் அப்படிப்பட்ட சாதாரண மனிதர்கள் பார்க்கும் பார்வையில்தான் நானும் பார்த்தேன். ஆனால், இப்பொழுது அவரை நான் பார்க்கும் பார்வை அப்படிப்பட்டது அல்ல.
(2 கொரிந்தியர் 5:16-17)

விளக்கம்:

- கடவுள் படைக்கும் புதிய மனுக்குலத்தை, யேசு மூலமாகப் படைக்கிறார்.
- யார் யார் எல்லாம் கடவுள் யேசு மூலம் செய்ததை நம்பி, யேசுவோடு இணைந்து வாழத் தீர்மானிக்கிறார்களோ, அவர்களுக்குள் அதுவரை மரித்திருந்த அவர்களுடைய ஆவிக்கு உயிர் வருகிறது.
- உயிருள்ளவர்களால், தன்னைச் சுற்றி நடப்பவைகளை பார்த்து, கேட்டு, உணர்வதுபோல, தங்கள் ஆவியில் உயிர்பெற்றவர்கள், கடவுள் அவர்கள் வாழ்வில் செயல்படுவதை உணர முடிகிறது.

- இழந்துபோன கடவுள் சாயலைத் திரும்பப் பெறும் ஆசைகள் வளர்கிறது.
- அவரோடு பழகப்பழக கடவுளுடைய குணங்களான அன்பு, மகிழ்ச்சி, மனஅமைதி, சாந்தம், நீடியபொறுமை போன்ற குணங்கள் உருவாகிறது.
- பழைய பாவசுபாவங்கள் மறைந்து, யேசுவைப்போல ஒரு புதிய வாழ்க்கை வாழ முடிகிறது.
- அப்படி வாழ்கிறவர்களுக்கு, யேசுவைப் போல மரணத்தை வெற்றிபெற்ற காலங்காலமான வாழ்க்கையும் காத்திருக்கிறது.

அக்டோபர்

கடவுள் கோவிலுக்கு அஸ்திபாரம் போன்ற யேசுவும், யேசுவின் பிரதினிதிகளும்!

4 கடவுளுக்குரியவர்களைக் அவரிடம் சேர்க்க கடவுளால் அனுப்பப்பட்டவர்கள்:

அதற்குப் பின்பு, கடவுளின் ஆளுகையைப் பற்றி போதிக்க, 72 பேர்களைத் தெரிந்தெடுத்து, இரண்டு இரண்டு பேராக, தான் போக நினைத்த கிராமங்களுக்கு, யேசு ராஜா, அனுப்பினார்.

அவர்கள் புறப்பட்டுப் போவதற்கு முன்பு, யேசு அவர்களிடம் சொன்னது என்னவென்றால்: விளைந்த விளைச்சல்களை அறுவடை செய்ய வேலைக்காரர்களை முதலாளி அனுப்புவது போலவே, கடவுளைப் பற்றி மக்களுக்குச் சொல்லிக்கொடுத்து, அவர்களை கடவுள் ஆளுகைக்குள் வழிநடத்துகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால், ″கடவுளுடைய ஆளுகைக்குள் வரும் ஆசையோடு அனேக மக்கள் இருக்கிறபடியாலும், ஆனால், அவர்களைக் கடவுள் ஆளுகைக்குள் வழிநடத்துகிறவர்கள் குறைவாக இருக்கிறபடியாலும், ″உங்கள் வேலைக்காரர்கள் அனேகரை மேலும் அனுப்புங்கள்″ என்று, ராஜாவாகிய கடவுளிடம் வேண்டுதல் செய்யுங்கள். (லூ.10:1-2)

விளக்கம்:

- கடவுளுக்குரியவர்களை அவரிடம் சேர்க்க, யேசுவைக் கடவுள் முக்கியமாகப் பயன்படுத்திய

போதிலும், நம்மைப் போன்ற மக்களையும் அவர் பயன்படுத்த விரும்புகிறார்.

- ஒரு கட்டிடத்தைத் தாங்கி நிற்கும் முக்கிய தூண் போல, யேசுவைக் கடவுள் பயன்படுத்துகிறார்.
- மேலும், அவரோடு இணைந்து, அவருடைய திட்டங்களை, விருப்பங்களைப் புரிந்து மற்ற மக்களை அவருடைய ஆளுகைக்குள் வழிநடத்துகிறவர்களை பல்வேறு இனம், சமுதாயம், மொழிகள் பேசும் மக்களிடம் அவர் இன்றும் அனுப்பிக்கொண்டு இருக்கிறார்.

11 கடவுளால் அனுப்பப்பட்ட யேசு:

அதுமாத்திரமல்ல, நான்தான் மேசியா என்று, என்னைப் பற்றி நீங்கள் மக்களிடம் சொல்லும்பொழுது, உங்கள் பேச்சை நம்புகிறவர்கள், என்னை மேசியா என்று ஏற்றுக்கொள்கிறார்கள். என்னை மேசியாவாக ஏற்றுக்கொள்கிறவர்கள், என்னுடைய அப்பாவாகிய கடவுள்தான், என்னை இந்த பூமிக்கு அனுப்பினார் என்பதையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.″ என்றார். (யோவான்13:20)

விளக்கம்:

- மேலுள்ள வசனத்தின் அடிப்படையில் கவனித்தால், கடவுளால் இந்த பூமியில் பிறக்கச் செய்த யேசுவே அவர் வாசம் செய்ய விரும்பும் மக்களுக்குள் மிகவும் முதன்மையானவர் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.
- யேசு இந்த பூமியில் பிறப்பதற்கு முன்பு, கடவுள் கோவிலில் அவருடைய பிரசன்னம் அவ்வப்பொழுது இறங்கி, மக்களை வழிநடத்திய போதிலும், யேசு மூலம் மக்களை அவர் தன்னுடைய வழிநடத்த விரும்பியதின் சிறப்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.
- ஆகவே, யேசுவையும், அவர் கடவுளைப் பற்றிய சொன்ன உண்மைகளையும் ஏற்றுக்கொள்கிறவர், கடவுளை உண்மையாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

18 யேசுவால் அனுப்பப்பட்ட 12 தூதுவர்கள்/பிரதினிதிகள்

உங்களைப் பற்றி மக்களுக்குச் சொல்லிக்கொடுக்க, நீங்கள் எப்படி என்னை இங்கு அனுப்பினீர்களோ, அதுபோலவே நானும் அவர்களை இந்த உலக மக்களுக்குள் அனுப்புகிறேன். (யோவான்17:18)

யேசு அந்தப் 12 தூதுவர்களையும் அனுப்பும்பொழுது, ″கடவுளுடைய மந்தையிலிருந்து காணமல் போன ஆடுகள் போன்ற இஸ்ரவேல் சமுதாய மக்களை மாத்திரம் நீங்கள் தேடிப்போங்கள். சமாரியர்கள் வாழும் ஊர்களுக்கோ, மற்ற சமுதாயத்தார்கள் வாழும் ஊர்களுக்கோ நீங்கள் போக வேண்டாம். (மத்.10:5)

அப்பொழுது அவர், ″என்னுடைய அப்பா என்னை இந்த பூமிக்கு அனுப்பியது போலவே, என்னைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் மக்களிடம் சொல்லும்படி நானும் உங்களை அனுப்புகிறேன். கடவுள் தரும் சமாதானத்தோடு போங்கள்!″ என்று சொல்லிக்கொண்டே, எங்கள் மீது ஊதி, ″சுத்தமான ஆவியானவரை பெற்றுக்கொள்ளுங்கள்″ என்றார். (யோவான் 20:21-22)

விளக்கம்:

- யேசுவைக் கடவுள் யூத (இஸ்ரவேல்) சமுதாயத்தில் பிறக்கச் செய்ததன் நோக்கம், முதலாவது ஒரு மக்கள் கூட்டத்தை தனக்குரியவர்களாக்கி, பின்பு அவர்கள் மூலம்

மற்ற சமுதாய மக்களை தனக்குரியவர்களாக்கும் அவருடைய திட்டத்தை வெளிப்படுத்துகிறது.

- ஆகவே, யூதர்களுக்கு மட்டும்தான் யேசு, அல்லது கிறிஸ்தவர்களுக்கு மட்டும்தான் யேசு என்ற கருத்து, கடவுளுடைய உண்மைத் திட்டத்திற்கு எதிரான கருத்து.
- யூத மக்களைக் கடவுளிடம் வழிநடத்த பேதுரு மற்றும் 11 அப்போஸ்தலர்களைப் பயன்படுத்திய கடவுள், மற்ற சமுதாய மக்களைக் கடவுளிடம் வழிநடத்த பவுல் மற்றும் அனேகரைப் பயன்படுத்தியதையும், இன்றும் பயன்படுத்துகிறதையும் புரிந்துகொள்வது அவசியம்.

25 யேசுவால் அனுப்பப்பட்ட மற்ற தூதுவர்கள்/பிரதினிதிகள்

அதற்கு ராஜாவாகிய யேசு, 'வேண்டாம்! இங்கிருந்து கிளம்பு! ஏனெனில், மற்ற சமுதாய மக்களுக்கு கடவுளைப் பற்றி நல்ல செய்தியை சொல்லும்படி நான் உன்னை அனுப்பப் போகிறேன்!" என்றார். (அப்போ.22:21)

அதுமாத்திரமல்ல, நான்தான் மேசியா என்று, என்னைப் பற்றி நீங்கள் மக்களிடம் சொல்லும்பொழுது, உங்கள் பேச்சை நம்புகிறவர்கள், என்னை மேசியா என்று ஏற்றுக்கொள்கிறார்கள். என்னை மேசியாவாக ஏற்றுக்கொள்கிறவர்கள், என்னுடைய அப்பாவாகிய கடவுள்தான், என்னை இந்த பூமிக்கு அனுப்பினார் என்பதையும் ஏற்றுக்கொள்கிறார்கள்." என்றார். (யோ.13:20)

விளக்கம்:

- மேலுள்ள வசனத்தின் அடிப்படையில், கடவுள் வசிக்கும் கோவிலைக் கட்டியெழுப்ப, அபிஷேகிக்கப்பட்டவர் (மேசியா) அல்லது நியமிக்கப்பட்டவர் யேசு என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம்.
- ஆகவே, அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்கிறவர்கள் வாழ்வில் கடவுள் குடியிருக்க விரும்புகிறார்.
- மேலும், அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்கிறவர்கள், சாபம். பாவம், அழிவு, மரணம் போன்றவைகளிலிருந்து மக்களை அவர்

மூலம் காப்பாற்றும் கடவுள் திட்டத்தையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

- ஆகவே, யேசுவை மேசியா என்று மக்களிடம் சொல்கிறவர்களைக் கடவுளே தெரிந்தெடுத்து அனுப்புகிறார்.

நவம்பர்

கடவுள் கோவிலுக்கு அஸ்திபாரம் போன்ற கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்றவர்கள்

1 கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்றவர்கள்

கடவுள் மோசேயோடு பேசின பின்பு, அவனுக்குக் கொடுத்த ஆவியானவரை, இஸ்ரவேல் சமுதாயத் தலைவர்களான 70 பேர்களுக்கும் கொடுத்தார். அவ்வாறாக, ஆவியானவர் அவர்களுக்குள் வந்தவுடனேயே ஒவ்வொருவரும் கடவுள் (அவர்களிடம்) சொன்னதைச் சொல்லி முடித்தார்கள்.

அவர்களில் இருவரான எல்தாத், மேதாத் கடவுளுடைய கூடார வீட்டுக்கு வராமல் தங்கள் வீடுகளில் இருந்துவிட்டார்கள். ஆனால், வீடுகளில் இருந்த அவர்களுக்குள்ளும் ஆவியானவர் வந்தவுடன், கடவுள் (அவர்களிடம்) சொன்னதைச் சொன்னார்கள். (எண். 11:25-26).

சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தைகளை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன். (உபா.18:20)

விளக்கம்:

- மேலுள்ள வசனங்களின் அடிப்படையில் நாம் புரிந்துகொள்வது என்னவென்றால், கடவுள் மனிதர்களோடு பேச விரும்பும்பொழுது, அவருடைய ஆவியானவரை ஒருவருக்குக்

கொடுத்து அவர்கள் மூலம் மற்ற மனிதர்களிடம் பேசுகிறார்.

- அப்படிப் பேசுகிறவர்களைத் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கிறோம்.
- உபா. 18:20ன் அடிப்படையில், கடவுள் சொல்லாததை அவர் சொன்னதாகச் சொல்லுகிறவர்களையும், தங்களைத் தெய்வங்கள் என்று பொய்சொல்கிற ஆவிகள் மூலம், கடவுள் சொன்னதாகப் பொய் சொல்லுகிற மனிதர்கள் இருக்கிறதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- வேதம் எழுதப்படாத நாட்களில், ஆபிரகாம், மோசே போன்றவர்களிடம் கடவுள் நேரடியாகப் பேசினார் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
- ஆனால், கடவுள் தீர்க்கதரிசிகள் மூலம் தொடர்ந்து பேசுகிற போதிலும் தற்காலங்களில் எழுதப்பட்ட வேதபுத்தகம் இருக்கிறபடியால், வேதவசனங்கள் அடிப்படையிலேயே பேசுகிறார் என்பதை புரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.

8 சிறிது சிறிதாக தன்னை வெளிப்படுத்திய கடவுள்:

நீண்ட காலத்திற்கு முன்பு, கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்றவர்கள் மூலமாக, நம்முடைய முன்னோர்களிடம் கடவுள் பல நேரங்களில், பல விதங்களில் பேசினார்.

ஆனால், நாம் வாழும் இந்த கடைசி காலக்கட்டத்தில், அவருடைய மகன் மூலமாக நம்மோடு பேசினார். (எபிரே. 1:1-2)

விளக்கம்:

- கடவுள் ஆதாமைப் படைத்து, அவனோடு நேரடியாகப் பேசினார். ஆனால், ஆதாமின் கீழ்படியாமைக்குப் பின் மனிதர்கள் கடவுளிடம் நேரடியாகப் பேசமுடியாமல், அவரைத் தேடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
- ஆகவே, கடவுளே இல்லை என்ற நம்பிக்கையில் பலமனிதர்கள் வாழ ஆரம்பித்தார்கள்.
- ஆனால், வேத சரித்திரத்தில், கடவுள் சில மனிதர்கள் மூலம் தன்னைக் சிறிது சிறிதாக வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார்.
- தன்னைவிட்டு விலகிப்போன மனிதர்களைத் தன்னிடம் திருமபச் சேர்க்கும் திட்டத்தையும் அவர்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டேதான் இருந்தார்.
- அவ்வாறாக அவர் தன்னை வெளிப்படுத்த தெரிந்த மனிதர்களுக்குள், ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, தாவீது போன்றவர்கள்.

15 மகன் மூலமாக தன்னை முழுமையாக வெளிப்படுத்திய கடவுள்:

உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. (உபா.18:15)

உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். (உபா.18:18)

விளக்கம்:

- இந்த வசனங்களில் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டுள்ள நபர் யேசு.
- இவ்வாறாக, கடவுள் தன்னைப் பற்றிச் சிறிது சிறிதாக மக்களுக்கு வெளிப்படுத்திய கடவுள், கடைசியில் அவர் மகன் மூலமாக, தன்னை முழுமையாக வெளிப்படுத்தினார்.
- ஆகவேதான், யேசு, “என்னைப் பார்த்தால், நீங்கள் கடவுளைப் பார்த்ததற்குச் சமம் என்று சொன்னார்.
- இவ்வாறாக, யேசுவைப் புரிந்துகொள்வது மூலம், கடவுளுடைய குணங்கள், அவருடைய சக்தி, அறிவு போன்ற அனைத்தையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.
- மேலும், யேசு சொன்ன ஒன்றை நாம் இங்கு நினைவுகூறுவது நல்லது. அது என்னவென்றால்: வேதவாக்கியங்களை ஆராய்ந்து படித்தால் அதன்

மூலம் காலங்காலமாக வாழும் வாழ்க்கை கிடைக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களே, அதில் என்னைப் பற்றித்தான் எழுதியிருக்கிறது என்று சொன்னதன் அர்த்தம் என்னவென்றால்:

- வேதத்தில் சொல்லப்பட்ட யேசுவைப்பற்றி நாம் புரிந்துகொண்டால், நாம் சாவாமல் பிழைத்துக்கொள்ளலாம் என்பதே.

22 அவரை நம்பி வாழும் அனைவருக்கும் கிடைக்கும் வரம்:

அதுமாத்திரமல்ல, அநேக வருடங்களுக்கு முன்பாக, கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்ற யோவேல் எழுதிய காரியம்தான் இப்பொழுது நடக்கிறது.

கடவுள் சொன்னதாக அவர் எழுதியிருப்பது என்னவென்றால், 'கடைசி நாட்களில், மனிதர்கள் அனைவர் மேலும் என்னுடைய ஆவியானவர் வந்து தங்குவார்; அதன் விளைவாக, உங்களுடைய பிள்ளைகள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவர்கள் நான் சொல்லும் வார்த்தைகளை மக்களுக்குச் சொல்வார்கள்; இளம் வயதுள்ளவர்கள்கூட நான் தரும் காட்சிகளைப் பார்ப்பார்கள்; வயதானவர்கள் நான் தரும் கனவுகளை காண்பார்கள். (அப்போ.2:16-17)

விளக்கம்:

- பழைய ஒப்பந்த/உடன்படிக்கையின் காலகட்டத்தில், கடவுள் சொன்னதைச் சொல்லும் (தீர்க்கதரிசன) வரம் எல்லோருக்கும் கிடைக்கவில்லை.
- ஆனால், மனிதர்களுடைய பாவங்களுக்காக யேசு பலியாகி, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து, சீடர்களுக்கு 40 நாட்கள் காட்சியளித்து மேல் உலகத்திற்குப் போய் 10வது நாளில், ஆவியானவரை அனுப்பியபொழுது, யேசுவை நம்பி அங்கு கூடியிருந்த 120 பேர்கள் மேலும் அவர் வந்தார்.

- யேசுவின் ரத்தத்தால் செய்யப்பட்ட புதிய ஒப்பந்த காலமாகிய நம்முடைய காலத்தில், நம் அனைவருக்குமே கடவுள் சொன்னதைச் சொல்லும் (தீர்க்கதரிசன) இந்த வரம் கிடைப்பதைக் குறிக்கிறது.
- ஆகவேதான், பவுல் நீங்கள் எல்லோருமே இந்த வரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று 1கொரிந்தியர் 14:1ல் குறிப்பிடுகிறார்.

29 கடவுள் சொன்னதைச் சொல்லும் வரம் பெற்ற ஊழியம்:

அதுமாத்திரமல்ல, யேசு மேசியாவை நம்பி வாழ்கிற மக்களுக்கு, அவர் என்னென்ன வரங்களை கொடுத்தார் என்றால்: ஒரு சிலருக்கு, அவரை அறியாத மக்களிடம் போய், அவருடைய தூதுவனாக வேலை செய்யும் வரத்தையும், வேறு சிலருக்கு, கடவுள் சொன்னதைச் சொல்லும் வரத்தையும், வேறு சிலருக்கு, அவரைப் பற்றிய நல்லசெய்தியை மற்றவர்களுக்கு சொல்லும் வரத்தையும், மேலும் சிலருக்கு, அவரை நம்பி வாழ்கிற மக்கள் கூட்டத்தை வழிநடத்துகிற வரத்தையும், இன்னும் சிலருக்கு அவரைப் பற்றிய உண்மைகளை சொல்லிக்கொடுக்கிற வரத்தையும் கொடுத்து இருக்கிறார்.

ஏனெனில், ஒரு உடல் எப்படி ஒன்று போல வளர்கிறதோ, அதுபோல யேசு மேசியாவை நம்பி சுத்தமாக வாழ்கிறவர்கள், மற்றவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, உதவி செய்து, ஒன்றாக வளர்வதற்காகவே, அப்படிப்பட்ட வரங்களைக் கொடுத்து இருக்கிறார். (எபேசியர் 4:11-12)

விளக்கம்:

- கடவுள் சொன்னதைச் சொல்லும் (தீர்க்கதரிசன) வரம் அனைவருக்கும் கிடைக்கும் வாய்ப்பைப் பற்றி கடந்த வாரத்தில் தெரிந்துகொண்டோம்.
- ஆனால், இந்த வாரத்தில் தியானிப்பது, யேசு கூட்டத்தார்களாகிய கடவுள் கோவிலை கட்டி

எழுப்பப் பயன்படுத்தும் 5 ஊழியங்களில், இது ஒரு முக்கிய ஊழியமாக இருக்கிறது என்பதைப புரிந்துகொள்வது அவசியம்.

- முதலாவது, அப்போஸ்தல ஊழியம். அதாவது, ஒரு மனிதனை ஒரு மக்கள் கூட்டத்திற்கு, அல்லது இனத்திற்கு, அல்லது தனி மொழிபேசும் கூட்டத்தார்களுக்கு, அல்லது நகரத்தார்களுக்கு, ஊருக்கு என்று யேசு தெரிந்தெடுத்து அனுப்புவது.
- இரண்டாவது, கடவுள் சொன்னதைச் சொல்லும் (தீர்க்கதரிசன) ஊழியம்.
- அதாவது, அந்த குறிப்பிட்ட மக்கள் கூட்டம், அல்லது இனம் அல்லது நகரம், ஊர் குறித்த கடவுள் திட்டம், நோக்கம் பற்றிய கடவுளுடைய மனதை ஆவியானவர் உதவியால் அறிந்து, அதை அந்த மக்களுக்கு அறிவித்து அவர்களை யேசுவோடு இணைத்து கடவுள் கோவிலாகக் கட்டும் ஊழியம்.

டிசம்பர்

யேசுவைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தவைகளை நம்பி வாழ்கிறவர்கள்-அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்ட கடவுள் தங்கும் கோவில்

6 கடவுளால் அனுப்பப்பட்ட யேசுவை நம்பி வாழும் வாழ்க்கை.

நீங்கள் ஒருவர்தான் உண்மையிலேயே கடவுள் என்பதையும், உங்களால் அனுப்பப்பட்டு இந்த பூமிக்கு வந்த யேசு மேசியாவான என்னைப் பற்றித் தெரிந்துகொள்வதின் மூலமே காலங்காலமாக வாழும் அந்த உயிர் அவர்களுக்குக் கிடைக்கிறது. (யோவான் 17:3)

ஆகவே, கடவுளோடு இணைந்து வாழ்கிறேன் என்று சொல்லுகிற ஒருவர், யேசு எப்படி கடவுளோடு இணைந்து வாழ்ந்தாரோ, அதுபோலவே வாழவேண்டும். மேலும், அவர் சொன்ன கட்டளைகளை கடைப்பிடித்து வாழ்கிற ஒருவரால்தான், கடவுளோடு இணைந்து, அவரின் முழு அன்பையும் புரிந்து வாழ முடியும். (1 யோவான் 2:5-6)

விளக்கம்:

- யேசுவின் வாழ்க்கையில் அன்பு, தாழ்மை, கடவுளுக்குக் கீழ்ப்படிதல், மக்களுக்கு ஒரு வேலைக்காரர் போன்று செய்த சேவை, பாவத்தை முற்றிலும் புறக்கணித்தல் போன்ற குணங்களை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதே கடவுள் விருப்பம்.

- எனவே, கிறிஸ்துவ வாழ்க்கை வெறும் நம்பிக்கையோடு நின்று விடாமல், நம் வாழ்வில் அவருடைய குணங்கள் நிச்சயம் பிரதிபலிக்க வேண்டும்.
- யேசுவின் போதனைகளின்படி வாழ்வதே உண்மையாக அவர் மீதான அன்பின் வெளிப்பாடு.
- அப்படி வாழ்கிறவர்களுக்கே அவருடைய அன்பைப் புரிந்துகொள்ள முடியும்.

13 கடவுள் வார்த்தைகளை நம்பி வாழும் வாழ்க்கை:

உடனே யேசு அவனிடம், ″சாப்பாடு சாப்பிடுவதினால் மாத்திரம் மனிதன் உயிரோடு இருப்பான் என்று சொல்லமுடியாது; ஏனெனில், கடவுளின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையாலும் பிழைப்பான்a″ என்று அவருடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறது எனக்கு நன்றாகத் தெரியுமே″ என்றார். (மத்தேயு 4:4.)

படைப்புகளிலெல்லாம், நாம் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான், தன்னுடைய உண்மையான வார்த்தையாலே நம்மை அவர் புதிய மனிதனாக பிறக்க வைத்து இருக்கிறார். (யாக்கோபு 1:18)

விளக்கம்:

- உடல் உயிரோடு இருக்க சாப்பாடு தேவையாக இருந்தபோதிலும், சாப்பிடுவதால் மட்டும் எவரும் காலங்காலமாக வாழ முடியாது.
- ஆனால், கடவுளுடை சொல்லால் படைக்கப்பட்டவைகள் எப்படி அழிவில்லாததோ, அதுபோலவே, அவருடைய வார்த்தையால் படைக்கப்படும் நம்முடைய புதிய வாழ்க்கையும் அழிவில்லாதது.
- கடவுள் வார்த்தையால் மறுபடி பிறந்த நம்முடைய ஆவி, அவருடைய வார்த்தையைப் பால் போலபருகி, உணவுபோல சாப்பிடுவதாலேயே வளர்ச்சியடைகிறது என்று வேதம் கூறுகிறது.

20 ஆவியானவரோடு இணைந்து வாழும் வாழ்க்கை.

ஆகவேதான், கடவுளுடைய ஆவியானவரால் எவரெல்லாம் வழிநடத்தப்படுகிறரர்களோ, அவர்கள் அனைவரும் கடவுளுடைய பிள்ளைகள் ஆகிறார்கள். (ரோமர் 8:14)

அதுமாத்திரமல்ல, சுத்தமான ஆவியானவரோடு சேர்ந்து, புது வாழ்வு வாழ்கிற நாம் அனைவரும், அந்த ஆவியானவர் தரும் நினைவுகளால் நிறைந்து வாழவேண்டும். (கலா.5:25)

விளக்கம்:

- ஆவியானவனவரால், நம் ஆவியில் மறுபடி பிறந்த நாம், அந்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி வாழ்ந்தால் மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கை வாழமுடியும்.
- யேசுவுக்குள் மறுபடி பிறந்த நம்மை, நம்முடைய பழைய பாவ சுபாவம் பின்னுக்கு இழுக்கும்பொழுதெல்லாம், நாம் ஆவியானவரின் உதவி, ஞானம், சக்தியைச் சார்ந்து வாழவேண்டியது கட்டாயம்.
- யேசு எப்படி இந்த உலக கவர்ச்சி, உடல் ஆசைகள், பேய்களின் சோதனைகளை வெற்றிபெற ஆவியானவரைச் சார்ந்து வாழ்ந்தாரோ அதுபோலவே நாமும் வாழவேண்டும்.

27 யேசுவைப் போல முதிர்ச்சி அடையும் வாழ்க்கை.

ஒரு உடலில் உள்ள ஒவ்வொரு பாகங்களும், மூட்டுகளாலும் தசைநார்களாலும், ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு, ஒரு உடல் முழுவதும் தலையால் எப்படிச் செயல்படுத்தப்படுகிறதோ, அதுபோலவே, அவரை நம்பி வாழ்கிற மக்கள் அனைவரும் ஒரே உடலாக இணைந்து, தலையாகிய யேசு மேசியாவால் செயல்படுத்தப்பட்டு, கடவுளால் வளர்ச்சியடைகிறார்கள். ஆனால், ஒருசிலர் தலையாகிய மேசியாவை விட்டுவிட்டபடியால், தங்கள் சுயநலமான சிந்தனைகளின் அடிப்படையில், தாங்கள் பார்க்கும் காட்சிகளைப் பற்றி ஒரு காரணமும் இல்லாமல் பெருமை பேசிக்கொண்டு இருக்கிறார்கள், மேலும், சில உடல் தேவைகளை கடவுளுக்காக துறந்து வாழ்வதாக நினைத்துக்கொண்டு தூதர்களை வணங்கிக்கொண்டு, தங்களைப் போல மற்றவர்களும் வாழ வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உங்களைக் குற்றப்படுத்திப் பேசுகிறதை நீங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். (கொலோ.2:18-20)

விளக்கம்:

- சபையாகிய யேசு கூட்டத்தார்கள் உடல் என்றால், யேசுதான் அவர்களுக்குத் தலையாக செயல்படுகிறார்.
- ஆகவே, ஒரு உடலின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு அவயமும் எப்படிச் செயல்படுகிறதோ,

அதுபோலவே யேசு கூட்டத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும்.

- ஆனால், அவர்களில் ஒவ்வொருவரும், தலையாகிய யேசுவின் கட்டுப்பாட்டில் செயல்பட வேண்டும்.
- அப்படி வாழ்கிறவர்கள் யேசுவைப் போன்ற முதிர்சியை நோக்கி நிச்சயம் வளருவார்கள்.